# பருவகாலக் கனவுகள்!

## சுபா



'டண், டணா, டண்,டணார்' டண், டணார்' என்று கோயில் மணி சுற்று வட்டத்தில் இருக்கும் எல்லா ஒலிகளையும் அடக்கி விட்டு கம்பீரமாகக் கேட்கத் தொடங்கியது. மாலைவேளை பூசையை அறிவிக்கும் மணி அது.

ஏதேதோ வேலையாக எங்கெங்கோ எறும்பு போல் விரைந்து கொண்டிருந்தவர்கள் மணியோசை கேட்டு ஒரு அடி வைத்துவிட்டு கன்னத்தில் 'சிவ, சிவ' என்று முணுமுணுத்துக் கொண்டே நடந்தார்கள்.

கும்பகோணம் நாகேசுவரன் கோவில் கல்தேர் அருகில் உட்கார்ந்திருந்த சந்தருக்கு கோயில் மணியின் ஒலி உடம்பில் ஒரு மின்னலை நுழைத்துவிட்டது மாதிரி இருந்தது.

அவனை அறியாமல் கன்னத்தில் போட்டுக் கொண்டான். உட்கார்ந்திருந்தவன் எழுந்தான். கோயிலுக்குள் நடந்தான்.

கோயிலின் கோபுரம் திமுதிமுவென்று வளர்ந்து வானில் இருக்கும் எல்லாம் தொட்டுவிட முயற்சி செய்து கொண்டிருந்தது. நாகேசுவரன் கோயில் கோபுரத்திற்கு மட்டும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. நான்கு கோபுரங்கள். நான்கு திசைகளிலும் ஒரே அளவு உயர்ந்திருந்தது. சாலையில் இருந்து உள்நோக்கினால் உள்ளே ஒரு பெரிய நகரமே இருக்கிற மாதிரியான ஒரு தோற்றம் கொடுப்பவை. ஒவ்வொரு கோபுரத்திலும் நிறைய பிறைகளை வைத்துக் கட்டியிருந்தார்கள். அந்தப் பிறைகளில் எல்லாம் நிறைய புறாக்கள் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தன. தனியாகவோ, இணையாகவோ குடித்தனம் நடத்தும் அந்தப் புறாக்கள், மாலை நேரங்களில், பொழுது சாயும் நேரங்களில் பிறைகளில் அமுக்கியிருக்கப் பிடிக்காமல் படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு கோபுரத்திற்கு இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் மேல் எழுந்து கீழ் இறங்குவது பார்ப்பதற்கு மகிழ்ச்சியைத் தரும் ஒரு காட்சி.

புறாக்கள் மட்டுமே அந்த இடத்தைச்
சொந்தம் கொண்டாடி முழுக்கோபுரத்தையும்
ஆக்கிரமிப்பது என்ன நியாயம் என்று பொரு
மைத் தீயில் வெந்துபோகும் வவ்வால்கள்
பலவும் அந்தி நேரங்களில் அங்கே உலவு
வது இன்னுமோர் காணவேண்டிய காட்சி.
வவ்வால்கள் புறாக்களிடமிருந்து தங்களை
வேறுபடுத்திக் கொள்வதற்காக கோபுரத்
தின் பக்கத்திலேயே மேலும் கீழும் இறக்கை
களை அடித்துக்கொண்டு இருக்காமல்,
கோபுரத்திலிருந்து நீண்ட தெருவில் ஒரு
ஐம்பதடி தூரம் கோபுரத்தின் உள்ளே நீண்ட
கோயில் வெளியில் ஒரு இருபதடி தூரம்
என்று அவைகளாக ஒரு தாய்ச்சியைக்
குறித்து வைத்துக்கொண்டு சரசரவென்று
பாய்ந்து உள்ளே வருவதும், வெளியே
செல்வதுமாக இருந்தன.

சுந்தர் தினம் தினம் அவற்றையெல்லாம்
உணராமலேயே பார்த்துக் கொண்டிருப்
பவன். அதனால் அவற்றில் அவனுக்கு
எந்தக் கவர்ச்சியும் ஏற்படவில்லை. அவன்
கோயிலுக்கு வருவது கூட உண்மையில்
பார்க்கப் போனால் சாமி கும்பிடுவதற்கு
என்று சொல்ல முடியாது. வீட்டில் இருந்து
தப்பிப்பதற்கு என்றுதான் சொல்ல
வேண்டும்.

நாகேசுவரன் கோயிலில் கூட்டம் என்பது
அவ்வளவாக இருக்காது. கும்பகோணத்துக்
கடைத்தெருவில் இருக்கும் நெருக்கம்,
சத்தம், வெளிச்சம், அர்த்தமில்லாத பேச்சு
எதுவும் கோயிலில் இருக்காது. சிந்தை
ஓட்டத்திற்கு தடையில்லாத, நடக்க நடக்க
வளரும் கோவில் என்பதால் சுந்தர் அந்தக்
கோவிலுக்குத்தான் வருவான்.

கோவிலுக்குள் நுழைந்தால் அவனுக்குத்
தன்னிரக்கம் அதிகமாகிவிடும். தன் நிலை
பற்றி எண்ணம் பொங்கிப் பொங்கி மேல
எழுந்து அவனுக்குள் ஆற்ற மாட்டாத
துக்கத்தை கிளறிவிடும். உலகில் கோடி
கோடியாய் இருக்கும் மக்கள் யாருக்குமே து



கமோ, பிரச்சினையோ இல்லாதது போலும்,
அவனுக்கு மட்டும்தான் பிரச்சனைகள்
தலைக்குமேல் கூடை கூடையாய் இருக்கிற
மாதிரியும் தோன்றும். வலிக்கும் காயத்தைத்
தடவிப் பார்ப்பதால் ஏற்படுகின்றன ஒரு
வேதனையான இன்பம். அவனுக்குத் தன
பிரச்சினைகளை அலசுகிறபோது ஏற்படுவ
தாக அவன் எண்ணுவான். அதனாலேயே
கோயிலில் நடக்கும்போது, உட்காரும்போது
அதைப்பற்றியே சிந்தித்துக்கொண்டு
நடப்பான்.

இன்றைக்கு பிரச்சினையை நினைத்துக்
கொண்டு நடந்தான். சுந்தருக்கு இருபத்து
மூன்று வயதாகிறது. தஞ்சாவூருக்கு 109ல்
போய் இறங்கிச் சென்று கல்லூரிப்படிப்பை
படித்து முடித்தவன். மூன்று அண்ணன்கள்
அவர்கள் எல்லாம் படிப்பைச் சுருக்கமாக
முடித்துக் கொண்டார்கள். கும்பகோணத்து
டவுன் உயர் நிலைப்பள்ளி படிப்பே வாழ்க்
கைக்குப் போதும் என்று முடிவெடுத்து
விட்டார்கள். அப்படி அவர்கள் முடிவெடுத்
ததற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன.
நாட்டம் படிப்பில் இல்லை. எட்டுப்படிப்பு
காரணமாகக் கையில் சில்லறை புரள்வ
தில்லை. உயர்நிலைப்பள்ளி படிப்பின் போது,
வாழ்க்கையில் படிப்பை விட வேறுபல
சுவாரசியமான விசயங்கள் இருக்கின்றன
என்று அவர்களுக்குத் தோன்றியதால் படிப்பு
கசந்து போனது.

மூன்று அண்ணன்களும் அப்படித்தான்
படிப்பை உதறினார்கள். படிப்பை உதறிய
வர்களுக்கு அவர்கள் வெளியில் சொன்ன
காரணங்கள் என்னவோ வேறு. குடும்பத்
தில் அப்பாவிற்கு வயதாகிவிட்டது. இனி
மேல் குடும்பத் தொழிலான தறி நெய்தலை
அப்பா ஒருவரே நடத்துவதென்பது அவரது
உடலுக்கு ஆகாத ஒன்று. அம்மாவிற்கும்
கண் பார்வை மந்தப்பட்டு வருகிறது. பட்டு
நூலில் இருக்கும் சிக்கலை எல்லாம் அம்மா
வால் எடுக்க முடியாது. அவனுக்கும் ஒரு

கையாள் வேண்டும். அப்பாவையும், அம்மாவையும் பாசம் மறைத்தது. பையன்கள் தங்கள்மேல் உள்ள பிரியத்தால்தான் இப்படிச் சொல்வதாக நம்பி அவர்கள் மகிழ்ந்து போனார்கள். படிப்பை நிறுத்தச் சொன்னார்கள். பையன்கள் தறியில் உட்கார்ந்து சேலை நெய்வார்கள் என்ற அப்பாவின் எதிர்பார்ப்பில் மண் விழுந்து விட்டது. ஒவ்வொருத்தனும் தறியில் உட்காருகிற மாதிரி பாவனை பண்ணினார்கள். ஆனால் அப்படி வேலை செய்ததற்கு அப்பா காசு கொடுக்கவில்லை. காசு இல்லாமல் சினிமாவிற்கு போவது எப்படி? நல்ல சட்டையும், பாண்ட்டும் அணிவது எப்படி? அதனால் வீட்டுத் தறியில் வேலை செய்வதைவிட்டு, வெளித்தறிக்கு கூலிக்கு வேலை செய்தார்கள். வேலை கற்றுக்கொண்டு, தறியில் ஒருநாள் உட்கார்ந்து வேலை செய்து, கூலி பெற்றதும் அவர்கள் அந்தக் காசு கையை விட்டு அகலும்வரை மறுபடி தறிமேடை பக்கமே போகாமல் சண்டித்தனம் பண்ணினார்கள். சினிமாதான். கடைத்தெருதான். கிளப்தான். சாயங்கால நேரத்தில் பவுடரும், இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கின மட்டமான சென்ட்டும் உடலில் மணக்க, கோவில் கடைத்தெருதான். அங்கே பெண்களைப் பார்த்துப் பார்த்து, போதையேற்றிக் கொண்டு, நரம்புகளை முறுக்கேற்றிக் கொண்டு எப்போதும் அந்த மோகத்தின் நினைப்பிலேயே திரிந்தார்கள்.

அம்மாவும், அப்பாவும் இது தலை எழுத்து என்று ஆண்டவனைக் குறை சொன்னார்கள். அப்பா வயதுடைய அவருடைய சிநேகிதர்கள் சிலர் அப்பாவை நெருங்கிப் பையன்களுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி போட்டுவிட்டால் அப்புறம் அவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள் என்ற ஒரு நச்சுக்கருத்தை அப்பாவின் மனதில் விதைக்க, அப்பா பையன்களுக்குப் பெண் தேடினார்.



சாத்திரத்தில் என்ன சொல்கிறது? எப்பேர்ப்பட்டவனுக்கும் இறைவன் ஒரு இணையைப் படைத்திருக்கிறான் என்று.

அப்படித்தான் அண்ணன்களுக்கும் பெண்கள் வாய்த்தார்கள். தேவர்கள் தேவதைகளை மணப்பார்கள். அரக்கர்கள் அரக்கிகளை மணப்பார்கள். அண்ணன்கள் அண்ணிகளை மணந்தார்கள். அண்ணன்களுக்கு ஏற்ற அண்ணிகள். வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், சுற்றியிருக்கும் பேருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பன போன்ற உயர்ந்த கருத்துக்களைப் பற்றிய எண்ணமே சிறிது மற்ற அண்ணிகள். அவர்களும் சினிமாவிற்குப் போகவேண்டும். பவுடர் பூசிக்கொள்ள வேண்டும். முடிந்தால் திரைப்பெண்கள் போல் உதட்டுச் சாயம் தடவிக்கொள்ள வேண்டும். சென்ட் மணக்க வேண்டும். ஓட்டல்களில் அல்வாவும், முறுகல் தோசையும் சாப்பிட வேண்டும் என்பதே அண்ணிகளின் வாழ்க்கை நோக்கங்கள்.

பெரிய அண்ணிக்கு அவளுடைய பிறந்த வீட்டு ஆதரவும் இருந்ததால், அண்ணிக்குச் சண்டை போடுவதற்கும், ஆயுதம் ஏந்துவதற்கும் எளிதாக இருந்தது. அதுதான் அவள் பின்னால் ஒரு படை இருக்கிறதே. ஆரவாரம் செய்ய, உற்சாகமூட்ட, ஆயுதம் எடுத்துத் தர, சமயத்தில் அவளோடு இணைந்து போராட. கடைசியில் பெரிய அண்ணன் தனது வாலிபத்திமிரையும், துடுக்குத்தனத்தையும் தன் மனைவியிடம் அடகு வைத்துவிட்டு அவள் பின்னாலேயே போய் அவள் காட்டிய தறிமேடையில் அமர்ந்து, சிக்கா புக் சிக்கா புக் என்று சேலை நெய்யத் தொடங்கிவிட்டான். பெரிய அண்ணி தன் பங்கிற்கு பட்டுநூல் சிக்கெடுப்பது, சிக்கெடுத்த நூலை உருளையில் சுற்றுவது என்று கைவேலை செய்து சம்பாதித்து தனது சினிமாவிற்கும், தனது பவுடருக்கும், தனது அல்வாவிற்கும், முறுகல் தோசைக்கும் வழி தேடிக்கொண்டு விட்டாள். அப்படிக் கொஞ்

சம் கொஞ்சமாய்ச் சேர்த்த பணத்தை வைத்
துக்கொண்டு இப்போது தனக்கு பாத்திய
தைப்பட்ட சற்று வட்டாரங்களில் அடகு
பிடித்து, அரசோச்சி வருவதாகக் கேள்வி.
அவளைச் சுற்றி இருக்கும் இயலாத பெண்
கள் எல்லாம், குடிகாரக் கணவன்களின்
மனைவிகள் எல்லாம் தத்தம் குழந்தை
களுக்கு வயிற்றில் இடுவதற்காக, வீட்டில்
இருக்கும் சீதனமாக வந்த பித்தளை அண்
டாக்களையும், குடங்களையும், சின்னச்
சின்ன வெள்ளிக் குப்பிகளையும், கொலுசு
களையும் அண்ணியிடம் ஈடாக வைத்துப்
பணம் பெற்றுச்சென்று, பானையைப்
பொங்க வைப்பதால், அண்ணி அவர்களுக்
கெல்லாம் பெரிய ராணியாகிவிட்டாள்.
சின்ன அண்ணன்கள் அப்படி இல்லை.
தத்தம் மனைவியருக்கு அப்பாலும் உலகம்
இருக்கிறது என்பதை உணர்ந்தவர்களா
யிருந்தார்கள். கல்யாணமான கொஞ்ச
நாட்களுக்கு புது மனைவியுடன் ஓட்டல்,
சினிமா என்று படையெடுத்துவிட்டு பின்
சோர்ந்து போனார்கள். ஒவ்வொரு
படையெடுப்பும் ஏராளமான பொருட்
சேதத்தை ஏற்படுத்தியதுதான் முக்கிய
காரணம். அண்ணிகளுக்கு ஏமாற்றம். பெரிய
மருமகள் பிய்த்துக் கொண்டு போனமாதிரி
இவர்களும் இந்த வீட்டு இராட்டினத்தி
லிருந்து தத்தம் நாயகர்களோடு
பிய்த்துக்கொண்டுபோக ஆசைதான்.
ஆனால் சின்ன அண்ணன்கள் இருவரும்
முரடர்களாக இருந்தார்கள். அம்மா, அப்பா
எதிரிலேயே மனைவியைக் கை நீட்டி
அடிக்கும் அளவு தைரியம் பெற்றவர்களாக
இருந்தார்கள். காலால் உதைக்கும் அளவு
கால்களில் வலுவும் நெஞ்சில் துணிவும்
கொண்டவர்களாக இருந்தார்கள். அதனால்
அண்ணிகள் இருவரும் கொஞ்சம்
அடங்கித்தான் போக வேண்டியிருந்தது.
அப்பாவையும், அம்மாவையும் ஒரேடியாக
ஒடுக்கிவிட்டது. ஆகாரமின்றி, ஆட்சி



பதிக்கப்பட்டு, குகை மூலையில் ஒதுக்கப்
பட்ட கிழச்சிங்கங்களாக மாறிப்போனார்கள்.
அவர்கள் கர்ஜிப்பதாக நினைத்துக் குரல்
எழுப்பிய போதெல்லாம் அவை வெறும்
முனகல்களாக வெளிப்பட்டது கண்டு
சிறுமைப்பட்டு போனார்கள்.
கிழவர் திண்ணையில் உட்கார்ந்து
கொண்டு, யாராவது மாட்டினால் எதிரில்
உட்காரவைத்துக்கொண்டு, "அந்த காலத்
தில் நான்" என்று தனது அரசின் மாண்பு
களைப் பற்றிப் பேசத் தொடங்கினார். தனது
ஆட்சிக்காலம்தான் பொற்காலம் என்றார்.
கிழவிக்கு வெற்றிலையும் பாக்கும்
இடிக்க ஒரு இரும்புரல் ஏற்பட்டது. கிழவி
கண்களை மூடிக்கொண்டு லொக் லொக்
என்று வெறும் உரலை இடித்துக் கொண்டி
ருந்துவிட்டு, தன் மனக்கண்ணிலேயே தன்
உயர்வையும் தாழ்வையும் எண்ணிப் பார்த்து
விட்டு, அவளுக்கே கேட்காத குரலில்
பிலாக்கணம் வைத்துவிட்டுப் போய்
விட்டாள்.

கடைக்குட்டியான சுந்தர் மாட்டிக்
கொண்டான். சுந்தர் அந்த வீட்டில் மிகத்
தாமதமாக பிறந்த பிள்ளை. பெரிய அண்
ணன், அடுத்த அண்ணன், அடுத்த அண்
ணன் என்று மூன்று பேருக்கும் ஒவ்வொரு
வருட இடைவெளிதான். இளமை ஊற்று
வற்றாது இருந்த காலத்தில் அடுத்தடுத்து
மூன்று மகவுகளைப் ஈந்தி பால் புகட்டிவிட்
அங்கம்மாவுக்கு உடலில் திராணி இருந்தி
ருக்கிறது. அப்புறம் கிட்டத்தட்ட சின்ன
அண்ணன் பிறந்த பதினைந்து வருட காலம்
வரை வனவாசம் போன மாதிரி இருந்த
அம்மாவும், அப்பாவும் பதினைந்து வருட
மவுனத்திற்குபின் எப்படியோ கூடிக்குலவிப்
பிறந்தபிள்ளை சுந்தரமூர்த்தி.
அவன் வயிற்றிலிருந்து வெளியே
விழுந்தவுடன் விக்கிரகம் மாதிரி இருந்தான்
எனவும், சூரிய சந்திரர்களைப் பழிக்கும்
அழகுடனும், உடல் ஒளியுடனும் இருந்தான்

என்பதாகவும் வெளியே குழந்தையை இழுத்துப்போட்ட தாதியிலிருந்து, பிரசவத் துணிகளைத் துவைத்துப்போட வந்த வேலைக்காரி வரை அத்தனை பேரும் ஒரே கருத்தை ஊத்துச் சொன்னதால் அவனுக்கு அப்பாவும் அம்மாவும் இணைந்து சுந்தரமூர்த்தி என்று பெயரிட்டார்கள்.

அவனுக்கு அம்மா தின்பண்டம் வாங்கித் தின்பதற்கு அவ்வப்போது காசு கொடுத்து வந்தாள். சின்ன வயதில் அண்ணன்கள் எல்லாம் அவனைத் தோளில் ஏற்றிக் கொண்டு, நான் நீ என்று தண்ணீர் வறண்ட அரசலாற்று மணலில் ஓடியிருக்கிறார்கள். ரோஸ்மில்க் வாங்கிக் கொடுத்து அவன் உறிஞ்சிக் குடிப்பதை வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்.

அப்போதெல்லாம் வாழ்க்கை இப்படி இனிப்பு மிட்டாயாகத்தான் இருக்கும் என்று அவன் நம்பிக் கொண்டிருந்தான்.

அம்மாவும், அப்பாவும் சிம்மாசனங்களில் வீற்றிருந்த காலம் அது. இப்போது பெரிய அண்ணன் வேறு கட்சி தொடங்கிவிட்டான். அம்மா, அப்பா இல்லை. வீட்டில் சின்ன அண்ணிகள் இருவரும்தான் தத்தம் கர்வங்களோடு அவனை எதற்கும் ஏவுகிறார்கள்.

அண்ணன்களிடம்கூட அவன் முன்பு கண்ட கருணை இல்லாது போய்விட்டது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதுபோல், சுந்தர் அந்த வீட்டிற்கு இளைத்தவனாகி விட்டான்.

என்ன இருந்து என்ன? அவனால் அந்த வீட்டுக்கு ஆதாயம் இல்லை. அண்ணன்களைப் போல் அவன் தறிமேடையில் உட்கார்ந்து ஒரு செக்கு மாடுபோல் வாழ்க்கையை 'ங்கீ' என்ற ஓயாத ரீங்காரத்துடன் தொடங்குவதில் அவனுக்கு விருப்பமில்லை. சின்ன வயதிலேயே சம்பாதிக்கத் தொடங்கிய அண்ணன்கள் எல்லாம் இன்றைக்கு வெள்ளையும், சொள்ளையு



மாய், நெய்யும் பருப்புமாய் வளைய வந்து கொண்டிருந்தால், அவனும் மறுபேச்சின்றி தறிமேடையில் உட்கார்ந்திருப்பான். அவர்கள் ஒன்றும் அப்படி இல்லை. ஏறக் குறைய அன்றாடங் காய்ச்சிகள். மழை நாட்களில் அவ்வளவாக வேலை இருக்காது. இருந்தாலும் மழை நாட்களில் நெசவுத் தொழில் என்பது கத்திமேல் நடை பழகும் சமாச்சாரம். இவ்வளவு அல்லல் நிறைந்த தறிவேலை சுந்தருக்குப் பிடிக்கவில்லை என்பதில் ஆச்சரியம் இல்லை. யோசிக்க வைத்தது. தறி வேலைக்குப் போகாதே என்று பகுத்தறிவு இடித்துச் சொல்லியது. அவன் என்னவோ கவுரவம் பார்ப்பதாக அண்ணன்கள் நினைத்து விட்டார்கள்.

சோம்பேறிகளுக்குச் சோறு இல்லை என்று அண்ணிகள் இருவரும் சேர்ந்து முடிவெடுத்துவிட்டார்கள். அண்ணன்களின் பரிவினால்தான் அவனுக்கு வீட்டில் அவர்கள் சாப்பிடும் போதெல்லாம் நாய்த் தட்டு போன்றதொரு தட்டில் சாதமும் கிடைத்து விடுகிறது.

"டேய், எங்களை பாருடா. அப்பன் உயிரோடு இருந்த காலத்திலேயே வேலைக்குப் போகணும், சம்பாதிக்கணும்னு நெனைச்சவங்கடா. அம்மா, அப்பாவை உட்கார வைச்சிச் சோறு போடணும்னே படிப்பை நிறுத்திட்டோம். படிப்பு வேண்டியதுதான். அரிசி, புளி என்ன விலை விக்குதுன்னு தெரிஞ்சிக்கலாம். முதலாளி கூலியை ஒழுங்காகக் குடுக்கிறானா இல்லியான்னு தெரிஞ்சிக்கலாம். மத்தபடி படிப்பு நமக்கு காசா கொண்டுவந்து கொட்டப் போவுது. அதுக்கு ஒழைக்கணும்டா ராஜா. என்னவோ படிக்கறேன் படிக்கறேன்னு போனியே. இப்ப என்ன ஆச்சி? எங்களை விட நாலு எழுத்துக் கூடப் படிச்சிட்டதால நீ தறி மேடைல ஒக்கார கவுரவம் பார்க்க ஆரம்பிச்சிட்டே. இந்தத் தறில வேணாம். அண்ணங்கிட்ட வேலை கத்துக்கறது முடியாதுன்னு

ஒனக்குத் தோணுதா சொல்லு. வேற எடத்துல சேத்து வுடறேன். பேசாம ஒக்காந்திருக்கிறதை பாரு. ஒனக்கு எங்கடா வேலைல அக்கறை இருக்குது. எவனாவது இடுப்பை ஒடிச்சிக்கிட்டுச் சம்பாதிச்சிப் போட்டா, நீ உக்காந்து கறியும், மீனுமா மூக்குப் பிடிக்கச் சாப்புடுவ. சொல்லேண்டா, வாயைத் தொறந்து எதாவது"

சுந்தருக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. படித்தது என்னவோ பெருங் குற்றம் போல் பேசுகிறார்கள் இவர்கள். படித்தால்தானே சிந்தனை கொஞ்சம் விரிவடைந்திருக்கிறது. மூட்டை தூக்குபவனுக்கு முப்பது ரூபாய் கிடைக்கிறது என்றால் மூளையை உபயோகித்து கம்ப்யூட்டர் அது இது என்று கொஞ்சம் சூட்சுமமாக வாழ்க்கையோடு போராடுபவனுக்கு முன்னூறு கிடைக்கிறதே. மூட்டை தூக்கப் போகவில்லை என்றால் வேலையில் பிரியமில்லை என்று உடனே ஒரு தீர்ப்பு எழுதினால் எப்படி?

இதற்கெல்லாம் எப்போது ஒரு முடிவு வரப்போகிறது?

"டேய், சுந்தர். என்னடா இது? இருட்ல உக்காந்து அழுதுகிட்டிருக்கே. பொம்பளையாடா நீ? வீட்டுக்கு போனேன். உங்க அண்ணி, நீ எங்கயோ மேயப் போயிருக்கிறதா' சொன்னாங்கள். நீ இங்கதான் மேய வந்திருப்பேன்னு தெரியும். அதான் ஒன்னைக் கூட்டிட்டுப் போலாம்னு வந்துட்டேன். வாடா" என்று சுந்தருடைய தோழன் ஆந்தை இராமசாமியின் குரல் கேட்டது.

சுந்தர் கல்தேர் அணைப்பிலிருந்து விலகி நிமிர்ந்து பார்த்தான். கண்களில் இருந்து கண்ணீர் கன்னத்தில் இறங்கும் உணர்வு அவனை லேசாகச் சிலிர்க்க வைத்தது.

"வீட்ல பட்டாசு வெடிச்சாங்களா?"

"ஆமா, அண்ணன் திட்டினான். சின்ன அண்ணன்"

"சின்ன அண்ணன் என்னா, நடு அண்



ணன் என்னா, பெரிய அண்ணன் என்னா? எல்லா அண்ணனுங்களும் திட்டத்தான் செய்வாங்க. மேல காக்க கழிஞ்சிரிச்சின்னா நாம கழுவி விட்டுடறதில்லையா... அது மாதிரி துடைச்சி விட்டுரா வேண்டியது தானே?"

"அசிங்க அசிங்கமா திட்டிட்டாருடா இராமசாமி. அதுவும் அண்ணிங்க முன்னால"

"டேய்... வாழ்க்கைல எதுவுமே அசிங்கம் இல்லடா இன்னிக்கு அசிங்கமாத் தோணும். நாளைக்கு அதுவே அம்சமாப் போயிடும். மண்ணுல முட்டாயி வுழுந்துட்டா ஒனக்கு அசிங்கம். எடுத்துத் திங்கற குழந்தைக்கு அதுவே அம்சம் இல்லையா? உங்கண்ணன் அப்படி என்ன அசிங்கமாப் பேசியிருக்கப் போறான். 'போய் எந்த இளிச்சவாயனாவது கிடைச்சான்னா அவன்கிட்டப் போய்...னு' சொன்னானா?"

சுந்தருக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படிக் கூடவே இருந்து கேட்ட மாதிரி, ஆந்தை இராமசாமி அவ்வளவு சரியாக சொல்லுகிறான்? ஆமோதித்துத் தலை ஆட்டினான்.

"எல்லார் வீட்லயும் சொல்றதுதாண்டா? எல்லா வூட்டுலயும் கல்யாணமான பொண்ணுங்க செய்யறதுதாண்டா. அப்ப அம்சமா இருக்குன்னு அனுபவிக்கிறது தானே மாப்ளே. உங்க அண்ணனும் அனுபவிச்சது தாண்டா. அதான் வார்த்தையா சொல்லிட்டான். அண்ணிங்க எல்லாம் அதுக்குப் பழக்கப்பட்டவங்கங்கறதால அதுல ஒன்னுமேயில்லைங்கற மாதிரி கேட்டுட்டுச் சும்மா இருந்துட்டாங்க. இதைப் போய்ப் பெரிசா நெனைச்சிக்கிட்டு இங்க உக்காந்து இப்படி அழுவுறியே"

சுந்தருக்கு மனம் கொஞ்சம் சமாதானமடைந்த மாதிரி இருந்தது. எழுந்தான். ஆந்தை இராமசாமி அவன் தோளில் கை போட்டுக்கொண்டான்.

போகலாம் என்று அவனுக்கே ஒரு சலிப்பு, ஏற்பட்டுத் திரும்பியபோது சுந்தர்

அவனைப் பார்த்தான்.

அந்தப் பெண் கையில் எண்ணெய்க் கிண்ணத்தோடு, கோயிலின் உள்நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். சுந்தர் பிரமித்துப் போனான். ஒரு பார்வையிலேயே அவள் அவனைப் பிரமிக்க வைத்துவிட்டாள். பூமியில் இருக்கும் மானிடப் பெண்கள் எல்லாரும் இளமையில் அழகுதான் என்றாலுங்கூட, இவளது அழகு ஒரு வார்த்தைக் குவியலுக்குள் கட்டுப்படாத அழகாயிருந்தது.

அவளது தலைமுடி நன்கு நீண்டிருந்தது. அதை அவள் அடர்த்தியான ஒற்றைப் பின்னலாக மார்பில் தவழவிட்டிருந்தாள். மல்லிகைச்சரம் அவள் பின்னந்தலையில் கொஞ்சமும், அவள் தோளில் கொஞ்சமுமாய் கொஞ்சிக் கொண்டிருந்தது. வெண்புறாவைத் தோளில் சுமந்து வரும் ஒரு தேவ கன்னியைப்போல் அவள் அவனுக்குத் தெரிந்தாள். அவள் கொஞ்சம் தலைகுனிந்துதான் நடந்து வந்தாள். ஆனால் அவளைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் படர்ந்து அவளுடனேயே வருகிற மாதிரி அவள் முகத்தில் அப்படி ஒரு களை இருந்தது. காலில் கொலுசு அணிந்திருந்தாள். அதில் இருந்த வெள்ளி, முத்துக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி 'ஜல், ஜல்' என்று அவனுள் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தின. நடையில் ஒரு ஒயில் இருந்தது. பாதங்கள் ரோஜா இதழ்களையும், செம்பருத்தியையும் சேர்த்து வைத்து அரைத்தால் உண்டாகும் நிறத்தில் இருந்தன. தாவணி அணிந்திருந்தாலும் கூட, உன்னதமான இணைகள். எவ்வளவு பெரிய விழிகள், மை பூசியிருந்தாள். கண்களில் கருங்கரைக்கு நடுவே வெண்மையான விழிப்படலம்தான். ஆனால் அதிலும் ஒரு செவ்வரி, மரத்தில் பூத்த அரளியின் நிறத்தில் அவளது உதடுகள்.

அவளை அவன் பார்த்துக் கொண்டிருந்த அதே வினாடியில் அவளும் அவனைப்



பார்த்துவிட்டாள். அவள் அவனைப் பார்த்த வினாடியில அவள் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. ஆனால் சுந்தர் அவளை அவ்வளவு தூரம் வைத்த கண் வாங்காமல் பார்த்தாலோ என்னவோ அவள் உதடுகளில் ஒரு சிறு புன்னகை தோன்றியது.

சுந்தருக்கு, அவள் என்னவோ வரமளித்த மாதிரிபட்டது.



## பருவகாலக் கனவுகள்! 2

ஒரு மின்னல் தோன்றி மறையும் நேரம்தான். அந்தப் பெண் கடந்து போய்விட்டாள். சுந்தரும் ஆந்தை இராமசாமியுடன் கோயிலைவிட்டு வெளிப்பட்டான். அவள் சுந்தரைப் பார்த்ததோ சுந்தர் அவளைப் பார்த்ததோ இராமசாமிக்கு தெரியாமல நடந்து விட்டது. தெரிந்திருந்தால் அவன் உடனே ஒரு கற்பனை மாளிகையை எழுப்பியிருப்பான். அவன் அறியாதவரை நல்லதுதான் என்று தோன்றியது சுந்தருக்கு. இருந்தாலும் அவளைப் பார்த்தாலும், அவள் அவனைப் பார்த்தாலும், அவள் உதடுகளில் பிறந்த புன்னகையை உணர்ந்தாலும் சுந்தருக்குள் ஏற்பட்ட கிளர்ச்சியை அவனால் வெளிப்படுத்த முடியவில்லை. அது ஒரு பித்துக்கிளர்ச்சி, ஆண்டவனையே நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கும் பக்தன், தன் நினைப்பில் ஆண்டவனுக்கு ஒரு உருக் கொடுத்து, அந்த உருவை தன் முன்னே நிறுத்தி, கடவுள் நமக்குக் காட்சி தந்து விட்டார் என்று பரவசப்பட்டு கிளர்ச்சியுறுவதைப் போன்றதொரு அனுபவம் அது. ஆண்டவனில்லை. தன் மனம்தான் அந்தச் சித்திரம் வரைந்து காட்டியது என்பதை உணர்ந்திருந்தாலும் வெளிமனம் ஒப்புக் கொள்ளாது. அந்த மாயைக் கிளர்ச்சியிலேயே மறுபடி மறுபடி மூழ்கிப்போக விரும்பும். அது போல்தான் சுந்தரும்

உணர்ந்தான். மறுபடி மறுபடி அந்தக் கிளர்ச்சி தனக்குள் உண்டாகாதா என்று அர்த்தமின்றி ஏங்கத் தொடங்கினான்.

ஆந்தை இராமசாமிக்குக் கண்கள் கொஞ்சம் பெரியவை. பார்த்தாலே முறைப்பதுபோல் தோன்றும். அதனாலேயே அவனுக்கு அந்தப் பெயர். பெயர் இருப்பதை இராமசாமி அறிவான். அதை ஒரு பெருமையாகத்தான் அவன் எடுத்துக் கொண்டான். எந்தப் பெண்ணும் அவனை நெருங்கி, 'என்ன முறைக்கிறே?' என்று கேட்டுவிட முடியாது. இயல்பே அதுதான் என்று சொல்லிவிடலாம்.

அன்றைக்கு ஆந்தை இராமசாமியின் கண்களுக்குக் கடைத்தெருவில் சரியான கன்னிப்பெண் சிக்கவில்லை.

"என்னடா மாப்ளே. ஊர்ல புதுப்படம் ஏதாவது போட்றுக்கானா?"

"ஏன்?" என்று புரியாமல் கேட்டான் சுந்தர்.

"ஒருத்தியைக்கூட காணுமேடா மாப்ளே" என்றான்.

சில தலை நரைத்த கிழவிகள், பட்டு நூலை ஒரு பெரிய மாலை தடிமனுக்கு வைத்துக்கொண்டு கையில் எட்டுப்போல் செய்து மாட்டிக்கொண்டு நடந்து போனார்கள். வெற்றிலை, சீவல், பன்னீர்ப் புகையிலை சகிதம், ஒரு நடுத்தர வயதுக் கும்பல் அரசியலை கொழகொழ மொழியில் வம்பளந்து கொண்டிருந்தது. முராரியில் எப்போதும் போல் கூட்டம் இனிப்புகளை வாங்க மொய்த்துக் கொண்டிருந்தது.

"கும்பேஸ்வரன் கோயிலுக்குப் போலாமா?"

"டேய். அந்த சாமி வேலைல்லாம் ஒன்னோட நிறுத்திக்கோ. நம்பளையும் சாமியாராக்கி விட்டுடலான்னு பாக்காதே. என்னை எந்த அண்ணனும் உங்கண்ணன் சொல்ற மாதிரி சொல்றதில்லை. கோவிலுக்கு வந்து உக்காந்துகிட்டு அழறதுக்கு.



என்னை எந்தப் பயலாவது ஏதாவது சொன்னா செவுட்லயே ரெண்டு இழுத்துப்பிடுவேன். என்வாய் அசிங்கத்தை அவன் தாங்க மாட்டான். என்னையாடா அப்படிப் பண்ணச் சொன்னே? ஏண்டா ஒம்பொண்டாட்டிதான் இருக்காளே. அலுத்துப் போச்சின்னா... சொல்லு. நான் அந்த வேலையை எடுத்துக்கறேன்னு ஆபாசத்துக்கு மேல ஆபாசமாய் பேசிடுவேன். நீ ஒரு புளி மூட்டைடா. எவ்வளவு குத்துனாலும் வாங்கிகிட்டு உக்காந்திருப்பே...

சுந்தர் மவுனமாகி விட்டான். மறுபடி அண்ணனுடைய வசைச்சொல் மறுபடி மறுபடி அவனை வந்தடைந்து, வயதான கிழவியை குளிரின் ஊசி குத்துவதுபோல் குத்தத் தொடங்கியது. கண்கள் மறுபடி தாமாகவே கண்ணீரைச் சுரந்து கொண்டன. சற்றுமுன் கோயிலில் கண்ட பெண் உண்டாக்கிய கிளர்ச்சி எல்லாம் வெறும் மாயை என்பதை மனம் உணர்ந்துகொண்டு, வீட்டுக்குப் போனால் இன்னும் கேவலமான வசைக்கு ஆளாக நேரிடுமே என்று தவிக்கத் தொடங்கியது.

"மாப்ளே பாத்தியா. அதுக்குள்ள மூட் அவுட் ஆயிட்டியே, வா மாப்ளே டிபன் பண்ணலாம்"

"வேணாம்"

"ரோசமெல்லாம் போறும் மாப்ளே. அதை வீட்ல காட்டு. எங்கிட்ட காட்டாதே. அட சும்மா வா" என்று டிகிரி காப்பியை பசும்பாலில் கலந்து தரும் ஒரு ஓட்டலில், சுந்தரின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நுழைந்தான்.

வயிறு வாடுவதை அவனால் பொறுக்க முடிவதில்லை. ஓட்டலில் நுழைந்து அவனை உட்கார வைத்தவுடன் இலை வந்தது. முறுகலாய் இரண்டு ரவாவும், முறுகலாய் இரண்டு மாவும், நிறைய வெங்காயம் போட்டு இரண்டு ஊத்தாப்பங்களும் சொன்னான்.

ஆவிபறக்க ஒன்றன் பின் ஒன்றாய் வந்தன. காரமாய், தாளிக்கப்பட்ட கடுகு கவாசியமாய் நிரட, நிரட, சட்னி. சின்னஞ்சிறு வெங்காயம் வெட்டுப்பட்டு, வெந்து முழுக முழுசாய் மணக்க, அரைத்து விடப்பட்ட வெங்காய சாம்பார். கடைசியில் டிகிரி காப்பி.

அண்ணிகளுக்கு எதிரில் அண்ணன் திட்டியதெல்லாம் கூட சுந்தருக்கு மறந்துபோனது. சாப்பிட்டு வெளியே வந்து, "வரியா மாப்ளே?" என்று இராமசாமி கேட்டான்.

"எங்கே?"

"ஆத்தங்கரைக்கு"

"எதுக்கு?"

"வாயேன், ஒனக்கு ஒரு புது விஷயம் கத்துத்தரேன்"

இருவரும் மங்கலான வெளிச்சத்தில் மெல்ல மவுனமாக நடந்து அரசலாற்றங் கரையை அடைந்தார்கள்.

ஆற்றில் யாரோ அந்த நேரத்தில் முழுக்குப் போட்டார்கள். இழவுக்கு வந்தவர்கள்தான் இந்த நேரத்தில் முழுக்குப் போடுவார்கள். வானின் நட்சத்திரங்களைப் போல், இங்கொன்றும், அங்கொன்றுமாய் இருந்த பூமியின் விளக்குகள் முழுக்குப் போடுகிற ஆசாமியின் முகத்தைக் காட்டாமல், உருவை வெறும் கருப்பும் புகை நிறமும் கலந்த பிளிம்புக் கோடுகளாகக் காட்டின.

ஆந்தை இராமசாமி பையிலிருந்து ஆளுக்கொரு சிகரெட் எடுத்து பற்ற வைத்தான்.

## பருவகாலக் கனவுகள்! 3

வீடு திரும்பும் போதெல்லாம் சுந்தருக்குப் பயமாகவே இருந்தது. இராமசாமி சிகரெட்டைப் பையில் இருந்து எடுத்ததும் 'திக்' என்று இருந்தது அவனுக்கு. அவன் வீட்டில் இதுவரை



யாருக்கும் அந்தப் பழக்கம் இல்லை. அப்பாவுக்கு வெற்றிலைச் செல்லம். செல்லத்தில் வெகு சொகுசமாக ஏற்படுத்தப்பட்டிருந்த இடஒதுக்கீட்டில் புகையிலை, காசு கொடுத்த நாட்களில் அந்த இடம் பன்னீர்ப்புகையிலையால் நிரம்பியிருக்கும். அடுப்படியில பூனை ஆக்கிரமித்த நாட்களில் அந்த இடத்தில் பன்னீர் புகையிலையின் வாசம் மட்டும் இருக்கும். அண்ணன்களுக்கும் பொடி, புகையிலை என்று எந்தப் பழக்கமும் இல்லை. குடிக்கக்கூட வீட்டில் யாரும் மயங்கவில்லை. அண்ணிகள் இருவரும் அந்த வகையில் அண்ணன்களைக் கட்டுப் பாட்டில் வைத்திருக்கிற மாதிரிதான் தோன்றும் அவனுக்கு.

அப்படிப்பட்ட குடும்பத்தில இருந்து கொண்டு, தான் மட்டும் 'சிகரெட்' புகைத்தால் அப்புறம் அண்ணன்கள் அவனை நடத்தும் விதமே வேறு.

"வேண்டாம்டா இராமசாமி வேண்டாம்டா" என்று அவன் பலவீனமாக மறுத்தான்.

"மாப்ளே, புற்றுநோய்க்குப் பயப் படறியா? ஒரு சிகரெட்டால் புற்றுநோய் வராது மாப்ளே"

"அதில்லை, ஒண்ணு ஒன்பதாவும், ஒன்பது பத்தாவும்"

"இதுல என்னதான் இருக்குன்னு ஒரு தடவை தெரிஞ்சுப்போமே மாப்ளே"

பற்ற வைத்துவிட்டான். இராமசாமி ஏற்கனவே புகைத்துப் பழக்கமானவன் என்பது அவனது நடவடிக்கையிலேயே தெரிந்து விட்டது. அவன் இழுத்த விதத்தில் இழுத்த புகையை நெஞ்சில தேக்கிய விதத்தில் புகையை வெளியே விட்ட விதத்தில் எல்லாம் அனுபவம் பேசியது.

சுந்தருக்கு அது ஒரு அவஸ்தையாக இருந்தது. தொடர்ந்து இருமல், புகை எங்கேயோ தொண்டைக்குள் சிக்கி, எவ்வளவு

காறி உமிழ்ந்தாலும் வெளிப்படாமல், நடுத்தொண்டையில் ஒரு கசப்பான வண்டலுடன், சிகரெட்டு புகையிலையின் நாற்றமும் சேர்ந்து விட்டிருந்தது.

அவன் பாக்குப் போட்டான். வெற்றிலையும், நெய் சீவலும் போட்டான். அப்புறம் கூட அந்தக் கசப்புத் தொண்டையில் தெரிந்தது. மூச்சு விட்டால் சிகரெட் புகையின் நாற்றம் வருகிற மாதிரி பட்டது.

அடுத்தவன் புகைக்கும்போது, வாசனையாய்த் தெரிந்த புகை, ஆர்வத்தை கிளறின புகை இப்போது மட்டும் நாற்றமாய்த் தெரிவது எப்படி என்று அவனுக்குப் புரியவில்லை.

வீட்டுக்குள் நுழையும்போது குற்ற உணர்வோடு நுழைந்தான். எங்கே புகையிலை நாற்றம் தன் குற்றத்தை வீட்டாருக்குத் தெரிவித்துவிடுமோ என்று பயந்தான்.

அண்ணிகள் இருவரும் இல்லை. சினிமாவிற்குப் போயிருப்பார்கள்.

மங்கலான நாற்பது வாட் விளக்கு வெளிச்சத்தில் இரண்டு அண்ணன்களும் தறிமேடையில் மன்றாடிக் கொண்டிருந்தார்கள். ஓர் அண்ணன் ஊடு நூலை சீர்ப்படுத்தி முடிச்சிப் போட்டு இரு விரல்களுக்கு இடையில் நூலை வைத்து நிரடிக் கொண்டிருந்தான். இன்னொரு அண்ணன் பாவு நூலில் அறுந்து போனவற்றையெல்லாம் பிணைத்துக் கொண்டிருந்தான்.

அவன் தலையை சின்ன அண்ணன் கண்டான்.

"வாங்க ராஜாமாரே" என்றான் குரலில் எகத்தாளம் தொனிக்க.

"எங்கடா போய்வரே?" என்றான் நடு அண்ணன்.

இரண்டு பேருமே கையில் வாளேந்தி அவனோடு போர் புரிய தயாரானவர்களைப் போல வார்த்தைகளில் குரோதத்தைச்



சேர்த்துத் தடவித் தடவி உமிழ்ந்தார்கள்.

மற்ற நாட்கள் என்றால் அவனுக்கு எரிச்சல் மண்டிக்கொண்டு வந்திருக்கும்.

இன்றைக்கு தன் மீதான குற்ற உணர்வில் எரிச்சல் வரவில்லை.

"கோயில் வரைக்கும்" என்றான் குனிந்த தலை நிமிராமல்.

"நாங்க இங்கே உக்காந்து புடுங்கிட்டிருக்கோம். நீ பெரிய துரை. கோயில் குளத்துக்கும் கடை கண்ணிக்கும் போய் வருவே. ஆக்கி வைச்சிட்டு உனக்காக நாங்க காத்துக்கிட்டிருக்கணும்! அப்படித் தானே"

அவன் பதில் பேசவில்லை.

அவன் எது சொன்னாலும் அவர்களின் எரிச்சல் அதிகரிக்கும். தத்தம் வாட்களால் நேரடியாக அவர்கள் அவனை மார்பில் குத்திக் குத்தி இரத்த களறியாக்கி விடுவார்கள்.

"என்ன, வாயில கொழுக்கட்டையா?"

"நான் வெளில சாப்பிட்டுட்டேன்" என்றான்.

"எவன்டா அவன் ஒனக்குப் பிச்சை போட்டவன்?"

"நண்பன் வாங்கிக் கொடுத்துச் சாப்பிட்டா பிச்சையா?"

"சும்மா வாங்கிக் குடுப்பானாடா ஒரு நண்பன்? இன்னிக்கு டிபன் வாங்கித் தருவான். நாளக்கி பொம்மனாட்டிகிட்ட லட்டர் குடுக்கச் சொல்வான். இல்லன்னா வேற ஏதாவது ஆகா வேலை சொல்லுவான். நீ அதெல்லாம் செய்வே ஏன்னா படிச்சவன். தறில உக்காரமாட்டே. அதான் ஒங்கவுரவத்துக்கு ஏத்த வேலை இல்லியே"

"நான் என்ன சோம்பேறியாவே இருக்கப் போறேன்னா சொல்றேன். வேலைக்கெல்லாம் எழுதிப் போட்டுக்கிட்டுத்தானே இருக்கேன். யாரும் என்னை கூப்பிடலை அதுக்கு நான் என்ன பண்ணுவேன்"

"டேய் சுந்தர்"

நடு அண்ணன்தான் அழைத்தான்.

"என்ன?"

"நீ வேலைக்குப் போ. இல்ல போகாம இரு. நாங்க வேணாங்கல. ஒனக்கு வேலைக்கு எழுதிப் போடறதுக்குக் கூட நாங்கதான் ஸ்டாம்புக்கு காசு, போஸ்டல் ஆர்டருக்கு ருவா எல்லாம் கொடுக்கறோம். உங்கப்பா ஒண்ணும் ஒனக்கு செலவழிக்கறதுக்குன்னு எங்கிட்ட பண மூட்டையை குடுத்துட்டுப் போகலே. நாங்களும் ஒண்ணும் ஓகோன்னு சம்பாதிக்கல. காசு ஒண்ணும் இந்த வீட்டு மூலைல பாசிபுடிச்சிக் குவிஞ்சி கிடக்கலே. நாளைக்கு எங்களுக்குன்னு கொழந்தை குட்டிங்கன்னு பொறந்துட்டா, நாங்கள் அதுங்களையும் கவனிக்கணும். கொழந்தைன்னா வாந்தியும் இருக்கும். பேதியும் இருக்கும். பால் பவுடர், பாரெக்ஸ் டப்பின்னு ஒரு பெரிய ஆளுக்கு ஆவுற சாப்பாட்டுச் செலவைவிட, அதிகமாகவே ஆகும். எங்களால மட்டும் சமாளிக்க முடியும்னு நெனக்கிறியா? ஒனக்கு நாங்க இன்னும் எத்தனை நாளைக்குப் படியளந்துகிட்டே இருக்கிறது? இதோ பொட்டி நிறைய ஊடு நூல் சுத்தி வைச்சிருக்கும். உக்காந்து ஒரு அடி அடி. கெடைக்கற பணம் ஒனக்கு ஸ்டாம்பு ஒட்டறதுக்காவது ஆகும். போஸ்டல் ஆர்டருக்கு ஆகும். வீட்ல சோறு சாப்ட்டுக்க. ஒத்துவரலியா? எங்க பேச்சு ஒனக்கு வெளக்கெண்ணெயாத் தோணுதா? சரி, நாங்க ஒண்ணும் சொல்லல. ஒன் வழியப் பாத்துக்கிட்டுப்போ"

சின்ன அண்ணன் கரித்துக் கொட்டுவான். கண்டபடி பேசுவான். திட்டுவான். ஆனால் இந்த மாதிரி பட்டுக் கத்தரித்த மாதிரி பேசமாட்டான்.

நடு அண்ணன் 'வீட்டை விட்டு வெளியே போ' என்று பளிச்சென்று சொல்ல மாட்டான். இதற்குமேல் இன்னும் வெளிச்சம் போட்டு யாரால் பேச இயலும்?



அதற்காகத்தான் அண்ணிகள் இருவரும் இல்லை போலும். அவர்களுக்கு எதிரில் இப்படிச் சொன்னால், அவர்கள் தூண்டி விட்டதாக இவன் நினைப்பான் என்று அவர்களை எங்கோ வெளியில் அனுப்பியிருக்கிறார்கள்.

கடைசியில் கூண்டுக்குள் நுழைந்த எலியாக உணர்ந்தான். வெளிவர வழியில்லை. தறியில் உட்கார்ந்துதான் ஆக வேண்டும். அவனிடம் சொல்ல வேண்டியதை தெளிவாக்கிவிட்ட நிம்மதியில் அண்ணன்கள் இருவரும் தறியில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். சுந்தருக்கு அண்ணிகள் இருவரும் வருவார்களா இல்லையா என்று தெரியவில்லை. அண்ணன்கள் இருவருக்கும் சோறு பரிமாற வேண்டுமா என்பதும் தெரியவில்லை. எப்படியிருந்தாலும் அவனுக்குப் படுக்கை திண்ணையில்தான். பிச்சைக்காரனுடையதைப் போல அவன் பாயும், தலையணையும் திண்ணையில் ஒரு மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும். அவன் திண்ணை நோக்கிப் போனான். கோயில் அல்லாத நேரங்களில் இந்த இருட்டுத் திண்ணையும் அவனுக்கு மனுவின் மடி மாதிரி. இருட்டில் கண்ணீர் விடலாம். அது இதய பாரத்தைக் குறைக்கும். கண் இமை ஓரங்களில் இருந்து வடியும் நீர் அவன் காதுகளை நனைத்துக் குறுகுறுப்பேற்படுத்தும். படுத்தான்.

அவன் வீட்டைப் போலொரு நரகம் இல்லை என்று தோன்றியது. காதருகில் கொசுக்கள் ரீங்காரமிட்டன. திண்ணைக்குக் கீழே ஓடிய தெருவோர சாக்கடையில் சளசளவென்று சத்தம் கேட்டது. சாக்கடை நீர் எவ்வளவு சுத்தமாக ஓடிவந்தாலும் அது சாக்கடை நீர்தானே?

அவனால் படுக்க முடியவில்லை. எழுந்து தெருவில் இறங்கினான். நடந்தான். நல்ல நிலா அவன் மனதில் வெம்மையாய்க் காய்ந்தது. அந்த நேரத்திலும், நூற்றி

ஐம்பதடி நீளத்திற்குப் பண்ணையில் மறுநாள் ஏற்ற இருக்கும் பட்டுப் பாவு நூலின் ஈரம் அகல தெருவில் பெருக்கல் குறி மூங்கில் கழிகளை நட்டுப் பரப்பி சீப்பால் முடியை வாருவது போல விரலால் வாரிவிட்டார்கள். கஞ்சிப் பிசு பிசுப்பு அகலுவதற்காக, ஒன்றிருவர் சுந்தரைப் பார்த்துக் கொண்டே விரலால் பாவு நூலில் கோதி விட்டார்கள்.

"என்னப்பா படிப்பாளி சாப்பாடு முடிஞ்சதா?" என்று சிலர் கிண்டலாக வினவினார்கள். அண்ணன்கள் அவர்க ளிடம் எல்லாம் வத்தி வைத்திருப்பான்கள் என்று தோன்றியது.

அவன் பதிலின்றி நடந்தான். புதுத் தெரு முனையடைந்து திரும்பினான். அங்கே அருகில் ஒரு விறகுக் கடையில் கீழே மணபரப்பப்பட்ட ஒரு பிரதேசத்தில் உடற்பயிற்சி நடந்து கொண்டிருந்தது. பளு தூக்கினார்கள். பஸ்கி எடுத்தார்கள். கைக்குட்டைச் சுவர்களில் கையூன்றி தண் டால் எடுத்தார்கள். சுந்தர் இவர்களோடு போய் சேர்ந்துகொண்டான். சட்டையைக் கழற்றி மூங்கிற் சுள்ளிக் கட்டின் மேல் போட்டுவிட்டு, வியர்வை வழிய வழிய பஸ்கியும், தண்டாலும் எடுத்தான். இளை ஞர்கள் ஆடிய கபடியில் கலந்து கொண்டு ஓடினான், சிக்கினான், புரண்டான். அந்தப் பயிற்சி கொதித்த மனதைக் குளிர்வித்தது. பின்னால் இருந்த கேணியில் இருந்து தண்ணீர் இறைத்துத் தண்ணீர் ஊற்றிக் கொண்டான். ஒன்பது மணி ஆகியிருந்தது. வீட்டுக்குத் திரும்பியபோது எட்டு மணி ஆகி இருக்கலாமோ என்னவோ! இப்போது போனால் வீட்டில் இன்னும் அதே நிலை தான் நீடிக்கும். அவன் நடந்தான்.

காற்று இப்போது வருடிவிட்டபோது ஆனந்தமாக இருந்தது. உடலின் நரம்புகள் தளர்ந்திருந்ததால் ஒருவிதமான சோர்வு அவனை ஆக்கிரமித்திருந்தது. நடுத்தெரு



வில் நுழையாமல், அடுத்திருந்த பிரம்மன் கோயில் தெருவில் நுழையாமல், அதை யடுத்திருந்த பெரிய சவுராஷ்டிர தெருவில் நுழைந்தான். பெரிய சவுராஷ்டிர தெரு அவனுக்குப் பிடித்த தெருக்களில் ஒன்று. முதலாளிகள் வாழும்தெரு. பெரும்பாலும் பெரிய பெரிய வீடுகள். ஒன்றிரண்டு வீடுகளுக்கு காம்பவுண்ட் கேட் வைத்து உள்ளே அம்பாசிடரும், மாருதியும் கூட காணமுடியும். லட்சுமி தாராளமாகப் புழங்கும் தெரு என்பதால் ரேடியோவின் கானமும், தொலைக்காட்சிப் பெட்டியின் பாட்டும்கூட, தெருவில் தாராளமாய்க் கேட்கும். சிற்சில வீடுகளில் ஏற்றி வைக்கப் பட்ட தூபக்குச்சிகளில் இருந்து வரும் விரும்பத்தக்க வாசம் தெருவை தீவுத் தீவாய் நிறைக்கும். மனதை மகிழ்விக்கும். அந்தத் தெருவில் மட்டும் நிலா மிக தன்மை கலந்து தன் கதிர்களால் நனைப்பதாய் அவனுக்குத் தோன்றும்.


மனம் மெல்ல அந்த அனுபவத்தை நுகர்ந்து கொண்டிருந்தபோதுதான் அது நிகழ்ந்தது.

பெரிய வீடுகளில் ஒரு வீட்டின் கதவு திறந்து ஒரு பெண் சாப்பிட்ட இலையைச் சுருட்டி வீசினாள். தெருவில் எதிர்ப்புறம் இருந்த குப்பைத் தொட்டியை நோக்கி வீசப்பட்ட இலை அது. அது குப்பைத் தொட்டியை அடையுமுன் அதன் பாதையில் குறுக்கிட்டுவிட்டான். மிக எதிர்பாராத தருணம் அது. அவன் இலைப் பந்தை முதலில் என்னவோவாக நினைத்து வலது கையை உயர்த்தித் தடுக்கப் பார்த்தான். அது கையில் மோதி, அவனை கடந்து சென்று விழுந்தபின்தான் இலைப்பந்து என்று புரிந்துகொண்டான். அவன் கையில் அது மோதிய தருணம் விசிறியாய் விரிந்து கொண்டது. இலையின் கடைசியாய் உண்ட தயிர் சாதத்தின் மிச்சம் தயிரோடு அவன் கையில் லேசாகத் தீற்றிக்கொண்டு விழுந்

தது. அவனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. இலையை வீசியவளைக் கோபித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் தலை உயர்த்திப் பார்த்தான். அப்போது தான் அவள் மறுபடி ஒரு மின்னலாய் தென்பட்டாள். மாலையில் கோயிலில் பார்த்த அதே பெண்.

அவன் மேல் இலை பட்டதால் அவள் திகிலுற்றாள். அவனைப் பார்த்த பார்வையில் மிரட்சி தெரிந்தது. அவனால் கோபிக்க முடியவில்லை. அவளை மறுபடி பாராமல் மேலே விருட்டென்று நடந்து சென்றான். அவனுக்கு இருக்கவேண்டிய படபடப்பு அவனை வந்து சார்ந்தது.

திண்ணையில் விழுந்து, பாயில் மல்லாந்து தலை முதல் கால் வரை போர்த்திக் கொண்டு படுத்தபின்பும் அவளது நினைவு, தீண்டாமல் விடுவதில்லை என்று சபதமெடுத்த நாகம் போல் துரத்திக்கொண்டே இருந்தது.



## பருவகாலக் கனவுகள்! 4

காலையே மிக நாராசமாக விடிந்தது அவனுக்கு. சின்ன அண்ணிதான் நாராசத்தின் விதை. திண்ணைக்குப் பக்கத்தில் வாசல் நடையில் விளக்குமாறும் இடுப்புக்குட நீருமாய் நின்று கத்தினாள்.

"இப்படி வெயில் மேல வந்து சூடு வைச்சப்பறமும் உரைக்கலேன்னா என்ன அர்த்தம்? ஏற்கனவே தரித்திரம் தைதான்னு ஆடற வீடு. இப்ப அதுவும் குடியே வந்துடும். வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஒரு திண்ணையை தண்ணி ஊத்தித் தள்ள முடியல்லே. குடும்பம் நடக்கற வீடுன்னு அவுங்கவுங்களுக்கா தெரிய வேணாம்?"

சுந்தர் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். பொதுவாக அவன் காலையில் இருள்



விலகுமுன்பே எழுந்துவிடுவது பழக்கம். நேற்றைய இரவின் உடற்பயிற்சியும், மனக்கிளர்ச்சியும் சேர்ந்து அவனை வீழ்த்திவிட்டன. இப்படி எப்போதாவதுதான் நேர்ந்திருக்கிறது. இதற்கே இவள் இந்தக் கத்து கத்துகிறாள்.

மாலை வரை உடல் கழுவாமலேயே அத்தனை காரியமும் பண்ணுகிறவள் அவள். விளக்கு வைத்தப்பின்பும் கூட்டுவதும், துணி துவைப்பதும், குழந்தைக்கும் அவளுக்கும் தலைவாரி விடுவதும் அந்த வீட்டில் தினசரிக் காட்சிகள். இவள் தரித்திரத்தைப் பற்றி பேசுகிறாள். அப்பா செத்து திண்ணை காலியானபோது கூட திண்ணையைக் கழுவினால் மாமனாரையும் சேர்த்துக் கழுவி விடுகிற மாதிரி என்று தன் சோம்பேறித்தனத்திற்கு நியாயம் கற்பித்தவள்.

காலையில் அவளுடன் மல்லுக்கு நிற்க அவன் தயாராய் இல்லை. மனதில் வேறு பல கிளர்ச்சி தரும் மாற்றங்கள் நிகழ்கின்றன. அவற்றை அனுபவித்து அசை போடுவதை விட்டு, அனாவசியத்திற்கு மனதை வலிக்கச் செய்வானேன்.

அவன் பாயைச் சுருட்டி திண்ணையிலேயே கட்டப்பட்டிருந்த ஒரு மூங்கில் பரண் மேல் வைத்தான். திண்ணை காலி. அவன் கீழே இறங்கும்வரை பொறுக்கவில்லை அண்ணிக்கு. குடத்து நீரை சளசளவென்று தெளித்தாள். தெறித்தது. அப்படியே ஆடு மாதிரி திண்ணை ஓரம் போய் அதன் முகப்பிலிருந்து கீழே குதித்தான்.

பால்கேன் சைக்கிள்காரன் 'கிணிங்' 'கிணிங்' என்று மணிநாக்கை அசைத்துக் கொண்டு ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். சூரிய வெளிச்சம், அதை வரவிடாமல் அடுத்த ஒரு மரத்துடன் போராடி சில்லறைத் துணுக்குகளாய் தெருவில் இறைந்திருந்தது. ஒன்றிரண்டு

சிறு குழந்தைகள் அதன் பெற்றோர்களால் வீட்டு வாசலில் ஓடும் சாக்கடையின் மேல் நிர்வாணமாக உட்கார வைக்கப்பட்டிருந்தன.

அவன் அப்படியே வீட்டுக்குள் நுழைந்து முற்றத்துக் கொடியில் காய்ந்து கொண்டிருந்த துண்டை உருவிக் கொண்டான். ஆறு நோக்கி நடந்தான்.

காலை நேர ஆறு. சுறுசுறுப்பாய் இருந்தது. முந்தைய இரவில் அவனை இரகசியமாய் ஒளித்த ஆற்றங்கரை இப்போது அவனை வெளிச்சம் போட்டுக் காட்டியது. மார்பு வரை பாவாடையை இழுத்துக் கட்டிய பெண்கள் தாங்கள் கவர்ச்சியாக இருப்பதை அறியாமல் படித்துறையில் குனிந்து தோய்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பின்பக்கங்கள் நனைந்து பிரம்மா வரைந்து அனுப்பிய வளைவுகள், பிளவுகள் எல்லாம் இலைமறை காய் மறையாகத் தெரிந்தன.

சுந்தர் ஆண்கள் படித்துறை பக்கம் சென்றான். படித்துறை அலங்கோலமாக இருந்தது. பல்பொடி மிச்சக் காகிதம் தண்ணீரில் நனைந்து ஒருபால் கோடாய் படிக்குப் படி இறங்கியிருந்தது. பவர்லைட் சோப்பு உறைகளும், சாம்பின் சோப்பு உறைகளும் இறைக்கப்பட்டிருந்தன. மிச்சமான சோப்புகள் படிக்கட்டுகளில் தேய்த்துவிடப்பட்டதால் வழுக்கின.

பாலத்தின் மேல் சென்னையிலிருந்து வரும் 109 எண் ரெயில் தடதடத்து ஓடுவது தெரிந்தது. அவன் கல்லூரி போகும் நாட்களில் எல்லாம் அந்த ரெயிலில்தான் போவது வழக்கம். சில கிண்டல் பிடித்த பையன்கள் 'ஓம்போது' என்று சொல்வதுண்டு. ரெயிலில் பாட்டும் கூத்தும் இருக்கும். சீட்டு நடக்கும். காதல் இருக்கும். ஊடல் இருக்கும். காதலில் தோற்றுப்போன ஆணாவது பெண்ணாவது அதே ரெயில் முன் பாய்ந்து செத்துப்போன சம்பவங்கள் ஒன்றிரண்டும் அந்த ரெயில் சரித்திரத்தில்



கலந்து இருக்கிறது. துக்கமும், ஆனந்தமும் கலந்த ஒரு அசாதாரண வாழ்க்கைக் காலம் அது. அப்போது அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். இவன் படிப்பதை வரவேற்றார்கள். மற்ற அண்ணன்கள் வேலை செய்கிறேன் என்று சொல்லி ஏமாற்றிவிட்டதால், இவன் படிக்கிறேன் என்றதும் மறுப்பு எதுவும் சொல்லாமல் ஒத்துக் கொண்டார்கள். அதனால் கல்லூரிப் படிப்பு கவலையற்றுப் போனது.

சுந்தர் ஆற்றில் மூழ்கினான். சற்று நேரம் நீருக்கடியில் மூச்சுக்கட்டி நின்றான்.

காதில் நீர் புக முயன்றது. மூக்கில் நீர் புக முயன்றது. ஒன்றிரண்டு சிறு மீன்கள் காலில் வாய் பொருத்தி உரசி அவன் கால்களை உதறவைத்தன.

நீருக்கடியில் நிற்கும்போது வெளி உலகம் மறந்துபோனது. கவலைகள் எல்லாம் அர்த்தமற்றவை என்று தோன்றின. நாகேசுவரன் கோயிலில் பார்த்த பெண், அப்புறம் அவன் மீது எச்சில் இலை வீசிய பெண் என்று முதல்நாள் இரவு மனதில் சித்திரம் சித்திரமாய்ப் பார்த்து மகிழப்பட்டவள் கூட மறைந்தாள். நீரில் இருந்தபடி கண் திறந்தான். சூரியக் கதிர்கள் நீரை ஊடுருவின. பார்க்க அது கூட ரம்யமாகத்தான் இருந்தது.

நீரிலிருந்து வெளிப்பட்டு காற்றால், அதில் இருந்த குளிரால் உடல் முழுக்க பொடிப் பொடியாய் எழுந்த முத்துக்களை மெல்ல நீவிவிட்டான். துடைத்துக்கொண்டு நடந்தான். இன்றைக்கு இராத்திரி தரியில் உட்கார வேண்டும் என்பது அரச கட்டளை. மறுத்தால் நாடு கடத்தப்படுவாய் என்று விதிக்கப்பட்ட தண்டனை அவனுள் சிரிப்பு மூட்டியது. பசித்தது. இன்றைய பகல் பொழுதுக்கு அந்த வீட்டில் சோறு கிடைக்கும். இந்தப் பாழாய்ப்போன வயிறும், அதில் எரியும் நெருப்பும் இல்லாது போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

வீட்டுக்கு நடந்தான். நடையிலேயே அவனுக்கென்று ஒரு தகர பெட்டி இருக்கிறது. கல்லூரி நாட்களில் அவன் தைத்துக் கொண்ட பேண்ட்கள் இரண்டும், சட்டைகள் இரண்டும் அதில்தான் இருந்தன.

இன்றைக்குத் தஞ்சாவூர் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் போக வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். பஸ்சுக்குக் காசு இல்லை. கேட்டால் கொடுக்க மாட்டார்கள். அதற்கு ஒரு பாட்டம் பேச்சு எழும். என்ன செய்வதென்று தெரியவில்லை. இராமசாமியிடம் போய்க் கேட்டால் தருவான். அதற்கென்று எத்தனை நாளைக்குத்தான் அவனிடம் போய் நிற்பது.

ண்ட்டையும், சட்டையும் அணிந்து ண்டான்.

ந்த வீட்ல எல்லாரும் மாப்ளைங்களாப் போய்ட்டாங்க. ஒவ்வொருத்தரையும் போய் ஒவ்வொரு வேளைக்கும் உருவி உருவி விருந்துக்குக் கூப்புடற மாதிரி கூப்புடறதுக்கு என்னால ஆகிறதில்லப்பா. மத்தவங்க மாதிரி எனக்கும் வேலை இல்லன்னு நெனைச்சிட்டிருந்தா எப்படி?" என்று வழக்கம் போல் சின்ன அண்ணியின் குரல் கேட்டது.

அவனைச் சாப்பிட அழைக்கிறாள். போய் அவனாக உட்கார்ந்தான். தட்டில் ஐந்து இட்லிகளும் சட்னியும் இருந்தன. சாப்பிட்டான். 'ணங்'கென்று ஒரு தம்ளரில் கொஞ்சம் கருமையும் நீரும் கலந்த காப்பி விளிம்பை மீறிச் சிந்திக்கொண்டே வைக்கப்பட்டது. வெல்லக் காப்பி, குடித்தான்.

"சர்க்கரை இல்ல. மூணு நாளா சொல்றேன். அது போய் வாங்கிட்டு வரமுடியல. விடிஞ்சா மாப்பிள்ளை மாதிரி டிரஸ் பண்றதில ஒண்ணும் குறைச்சல் இல்ல. வீட்டு ஆம்பிளைங்க எல்லாம் தறில உக்காந்து நெஞ்சு வலிக்க நெய்யறாங்களேன்னு பட்டாத்தானே?"

"பையுங் காசுங் கொடுங்க. நான் போய்



வாங்கிட்டு வரேன்"

"நீ ஒண்ணும் வாங்கப் போக வேண்டாம். கவுரவம் பாழாயிடும்"

நான் அப்படி என்னிக்காவது சொல்லியிருக்கேனா?"

ஆணியில் தொங்கும் பையையும், ரேஷன் கார்டையும் எடுத்துக் கொண்டான். சின்ன அண்ணனிடம் போய்ச் "சர்க்கரைக்குக் காசு வேணும்" என்றான்.

அப்படி நின்று அவனிடம் காசு கேட்பது கூட அவனுக்கு மிகவும் அவமானமாகப் பட்டது. காசு கொடுக்கிறானோ இல்லையோ முறம் முறமாய் வசவு கொடுப்பான். ஆச்சரியப் படும்படியாக சின்ன அண்ணன் காசு கொடுத்தான். ஒரு பேச்சுகூட இல்லை. மழை பெய்யப் போகிறதா?

அவன் வெளியே வந்தான். கடலங்குடித் தெருவில்தான் ரேஷன் கடை. நடந்தான். எதிரே மாது தென்பட்டான். அவன் பரபரப்பாக இருந்தான்.

"நீ போலியா?" என்று சுந்தரை கேட்டான்.

"எங்கே?"

"போடா போக்கத்தவனே. இன்னிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்கு ஆள் எடுக்கறதா பேப்பர்ல வந்திருக்குதே. தற்காலிகம்தானாம். அப்புறம் சேர்ந்த பின்னால பணி நிரந்தரம் ஆகிறதைப் பார்க்கலாம்னு ரகு கூட சொன்னான். நான் அங்கதான் போய்க்கிட்ருக்கேன், வரியா?"

சுந்தருக்கு சர்க்கரை, அஸ்கா சகலமும் மறந்துபோனது. காலையில் தினசரி பார்க்கவில்லை. சீக்கிரம் எழுந்தால் நூலகம் ஏழு மணிக்குத் திறக்கும்போது ஒரு பார்வை பார்ப்பான். இன்றைக்குத் தாமதமாகிவிட்டது. அவன் சம்பந்தப்பட்டது என்றால் யாருக்குமே இரக்கம் வராது போலும். இன்றுதான் தாமதமாக எழுந்தான். வெள்ளிக்கிழமை, தரித்திரம் என்று சின்ன அண்ணி சொல்கிறாள். இன்றைக்குத்தான்

தினசரி பார்க்கவில்லை. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை விழா. இந் நேரத்திற்கு ரெயில் கிடையாது. பஸ்தான்.

"சரி போலாம்" என்று அவன் மாதுவுடன் நடந்தான். மாதுகூட ஏழை வீட்டுப் பிள்ளை தான். அவனுக்கும் வேலை ஒரு அட்சய பாத்திரம்தான். மாது தயங்கினான்.

"என்னப்பா... போலாம் வாயேன்"

"பஸ்சுக்குக் காசில்லடா. அதான் பங்களா வீட்டுப் பையன்கிட்டப் போய் காசு வாங்கிட்டு வரப்போறேன்"

"எங்கிட்ட இருக்கு வா" என்று சர்க்கரைக் காசைத் தொட்டுக் காட்டினான் சுந்தர்.

தஞ்சாவூரில் ஏமாற்றம் காத்திருந்தது. தினசரியில் அறிவித்தபடி அன்றைக்கு வேலைக்கு ஆள் எடுக்கவில்லை. அடுத்த மாதம் என்று சொல்லிவிட்டார்கள். கிட்டத்தட்ட ஒரு புரட்சிப்படை அமைக்கும் அளவிற்கு அங்கே வந்து சேர்ந்திருந்த வேலையற்ற இளைஞர்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஏமாந்ததை வெளிக் காட்டவில்லை.

"இவனுங்க வேலை கொடுத்துதான் வீட்ல விடியணுமா? போடா" என்று கிண்டலாய்ச் சொல்லி நகர்ந்தனர். சுந்தருக்கு ஏமாற்றம் மட்டுமில்லை. பயமாகவும் இருந்தது. சர்க்கரைக்காக வாங்கிய காசில் பத்து ரூபாயை வேட்டு வைத்துத் தீர்த்த மாதிரி ஆகிவிட்டது. போகும்போது இன்னொரு பத்து ரூபாயைத் தீர்த்துவிட்டால் வீட்டில் என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. அவனும் மாதுவுமாகச் சேர்ந்து ரெயிலில் கும்பகோணம் செல்வதென்று தீர்மானித்தார்கள். ரெயில் தஞ்சாவூரில் இருந்து புறப்படுகிற நேரத்தில் ஓடிப்போய் தொற்றிக்கொண்டார்கள். ரெயிலில் டிக்கெட் வாங்காமல் பயணம் செய்ததில்லை. இன்றைக்கு அதுவும் ஆகிவிட்டது. மாட்டினால் அபராதம் கட்டச் சொல்வார்கள்.



இல்லையென கைவிரித்தால் சிறையில் போடுவார்கள். மூன்று மாதமோ என்னவோ. போகிறது உள்ளே உட்கார்ந்து, களியோ கஞ்சியோ சாப்பிடலாம். வயிறு நெருப்பு பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

அப்படி ஒன்றும் மாட்டிக் கொள்ள வில்லை. ஸ்டேஷன் வந்ததும் ரெயிலின் பெட்டியிலிருந்து பிளாட்பாரம் அல்லாத மறுபக்கம் சரளைக்கற்களின் மேல் குதித்தார்கள். அப்படியே நடந்து சென்று, ரெயில் கடந்து போனபின் ஆற்றுப் பாலம் வரை நடந்து சென்று, ஊருக்குள் வந்தார்கள்.

"என்னால் உனக்கும் இன்னிக்கு செலவு" என்றான் மாது, அடிபட்ட குரலில்.

"அதெல்லாம் இல்லை. இன்னைக்கு நான் வீட்ல பாட்டு வாங்கணும்னு இருக்கு. அதை யாராலயும் மாத்த முடியாது"

மாதுவை அனுப்பிவிட்டான். அவனுக் குத் தனியே இருந்தால் நன்றாக இருக்கும் போலிருந்தது. சர்க்கரைக்காக கொண்டு வந்த பையை மடித்து பாக்கெட்டுக்குள் வைத்துக்கொண்டு நாகேசுவரன் கோவில் நோக்கி நடந்தான்.

தலை பாரமாக இருந்தது. இராமசாமி யிடம் போனால் சர்க்கரை காசை சேர்த்து விடலாம். ஆனாலும் சர்க்கரை வாங்காத தற்கு ஒரு திட்டும் விழும். அவனுக்கு செத்துப் போகத் தைரியம் இல்லை. வாழவேண்டும். சுயமாய் ஒரு வேலை தேடிக் கொள்கிற வரையில் அவன் சாப்பாடு வரைக்குமாவது பொருள் ஈட்டத்தான் வேண்டும்.

தறிமேடை காத்திருக்கிறது. அவனுக்குத் தறியில் உட்கார்ந்து பழக்கம் உண்டு. அப்பாவின் மடியில் உட்கார்ந்து அவர் கால்களின் மேல் தன் கால்களை வைத்து தறிக்கட்டைகளை அழுத்தியிருக்கிறான். தலைக்குமேல் தொங்கும் கயிறை கையால் பற்றி இழுத்து கண்டு பாவு நூலின் ஊடே

அம்பு போல் பாய்வதை வேடிக்கை பார்த்திருக்கிறான். பாவு நூல் அறுந்தாலும் அவனுக்குப் பிணைக்கத் தெரியும். ஊடு நூல் அறுந்தாலும் பார்க்கத் தெரியும். ஆனால் அந்த வேலை மணல் சரிந்த தண்டவாளத்தின் மேல் ரெயில் ஓடுகிற மாதிரி. சக்கரம் சுற்றும். ரெயில் முன்னேறாது. அதுபோலத்தான் வாழ்க்கைச் சக்கரம் சுற்றும். ஆனால் முன்னேற முடியாது.

இன்றைக்கு இரவு அவன் தறி மேடையில் உட்கார்ந்துதான் ஆக வேண்டும். நினைக்க நினைக்க அவனுக்கு நெஞ்சு வலித்தது. வீட்டுக்குப் போகாமல் வேறு எங்கேயாவது ஓடிப்போகலாம் என்பதற்கும் தோன்றவில்லை. போய் என்ன செய்வது? மறுபடி எங்கேயாவது இதைப் போன்ற கூலி வேலைதான். அல்லது தறி வேலையை விடவும் மோசமான வேலை.

அவனது குழப்பங்களினால், கோயிலில் நுழைவோரை எல்லாம் அவன் பார்க்கவில்லை. தனக்குத்தானே அவன் தலையாட்டிக் கொண்டிருந்தான். உழப்பிக் கொண்டிருந்தான். பார்த்தவர்களில் சிலர் பரிதாபப்பட்டார்கள். சிலர் பரிகாசமாய் நினைத்துச் சிரித்துக்கொண்டே நடந்தார்கள்.

தன்னிரக்கம், வயிற்று இரைச்சல், பசி, சர்க்கரைக் காசை செலவழித்ததால் உண்டான பயம் எல்லாமாய் சேர்ந்து அவனை மயங்கிவிழச் செய்தன. அவனை அறியாமல் அவன் கல் தேர் சக்கரத்தின் மீது மயங்கி விழுந்தான். அவனது வாய் கருங்கல்லின் ஒரு நீட்டலில் பட்டது. கிழிந்து இரத்தம் கொட்டியது.





# பருவகாலக் கனவுகள்! 5

கண்விழித்தபோது சுந்தருக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன ஆயிற்று எனக்கு? அவன் சாய்ந்து உட்கார்ந்திருந்த கோவில் தேர் எங்கே போனது? இதென்ன இடம்? முதுகையும் கைகளையும் அழுத்திய முரட்டுக் கருங்கற்கள் எங்கே? இங்கே என் இவ்வளவு குளிர்ச்சியாய் இருக்கிறது. வானில் இருந்து யாராவது பூமாரி பொழிந்து அவனை அதில் கிடத்திவிட்டார்களா? கட்டில் மேல் படுத்திருந்தான் என்று புரிந்தது. உடலுக்குக் கீழே மெத்தை. தலைக்கு மேலே மின்விசிறி. அறை முழுக்க பன்னீர் தெளித்துவிட்ட மாதிரியான ஒரு சுகந்தம்.

அவன் எழுந்து உட்கார்ந்தான். ஒரு பெரிய பணக்கார அறை. சுவரில் ஒரு பொடுகு இல்லை. அவ்வளவு வழவழப்பான சுவரில் கண்ணை உறுத்தாத ஒரு நிறம். அதில் மாட்டப்பட்டிருந்த சித்திரப் பலகை. மிகவும் மென்மையாய் நூல்போல் புகை வழங்கிக் கொண்டிருந்த இரு ஊதுபத்திகள். அந்தக் கட்டிலில்தான் படுத்தால் அது அழுக்காகிவிடும் என்று தோன்றியது அவனுக்கு. இறங்கினான். இறங்கியவனுக்குக் கண்ணாடி தெரிந்தது. கண்ணாடியில் முகத்தில் மோவாயில் கட்டு தெரிந்தது. மருத்துவர் போட்ட கட்டு என்பது பார்த்த மாத்திரத்தில் புரிந்தது. கோயிலில் உட்கார்ந்திருந்தவன் இப்படி ஒரு பணக்கார அறைக் கட்டிலில் அழுந்திக் கிடப்பதென்பது மதன காமராஜன் கதை நிகழ்ச்சி மாதிரிதான் இருந்தது. கட்டு வேறு. அவன் சாத்தியிருந்த கதவை நோக்கி நடந்தான். அதைத் திறந்தான்.

கதவிற்கு வெளியே நின்றிருந்த ஒரு பெண் அதிர்ச்சியடைந்தாள். அவள் ஏதோ திடீரென்று ஒரு கர்ப்பத்தின் முன் எதிர்ப்

பட்ட மாதிரி கண்களை அகலவிரித்தாள். அவன் அப்படித் திடுமென கதவைத் திறப்பான் என்று எதிர்பார்த்திருக்க மாட்டாள். மேலும் அவன் அறையில் இருக்க அவனை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தாள். அவள் கைகளில் ஒரு தட்டு. தட்டில் ஒரு ஜாங்கிரி இருந்தது. கூடவே முறுகலாய் ஆவிபறக்க இரண்டு தோசைகள் இருந்தன. சட்னி, மிளகாய்ப்பொடி, எண்ணெய், சின்னக் கிண்ணத்தில் சாம்பார்.

சுந்தர் அந்தப் பெண்ணின் அதிர்ச்சியைக் கண்டு பின்வாங்கினான். தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்து மறுபடி வளைக்குள் இழுத்துக்கொள்ளும் எலி போல மறுபடி கட்டிலில் சென்று அமர்ந்தான்.

அவள் உள்ளே நுழைந்தாள். சுந்தர் அவளை இமை கொட்டாமல் பார்த்தான். அவள் நல்ல அழகி. நெற்றியில் ஒரு சாந்துப்பொட்டு. பவுடர் ஒற்றல், மூக்கில் ஒரு மின்னல். சில பெண்களுக்கு மூக்குத்திதான் முகத்திற்கு அழகு. இவளுக்கு அப்படித்தான் இருந்தது. கொஞ்சம் அகலமான செழுமையாக முகம். அவளது அதரங்கள் கடிபடாத ஆப்பிள் துண்டங்களைப் போலத் தெரிந்தன. கண்கள் அகலமாக இருந்தன. மை தீட்டியிருந்தாள். இமைகளின் முடிகள் கூட அவளுடைய கண்களுக்கு தனிக் கவர்ச்சியை ஈந்தன. முத்துச் சிப்பி ஒன்று பிளந்தது போன்ற இமைகள். அவள் தலைமுடியை பின்னலிடாமல் அப்படியே வாரிப் படரவிட்டிருந்தாள். மெல்லிய துணியால் ஆன சேலை. சீன மஸ்லின் என்று படித்திருக்கிறான். அந்த மாதிரிச் சேலையோ என்னவோ!

அவன் இமை கொட்டாமல் பார்ப்பது கண்டு அவள் தன் இமைகளை இரண்டு மூன்று முறை சிமிட்டினாள். சிட்டுக்கள் சிறகுகளைப் படபடக்க வைத்த மாதிரி இருந்தது அது. சுந்தருக்கு ஒரு புது



சந்தேகம் கூட எழுந்தது. ஒருவேளை தான் இளமையாய் இருப்பதால் தன் கண்ணில் படுகிற இளம்பெண்கள் எல்லாம் வெகு அழகாய்த் தெரிகிறார்களோ என்று சந்தேகம்தான் அது.

"உட்காருங்க" என்றாள் அவள்.

சுந்தர் மேனகை முன் விசுவாமித்திரன் போல அப்படியே கட்டிலில் உட்கார்ந்தான்.

"சாப்பிடுங்க"

"நான்... நான்..."

"எல்லாம் அப்புறமாய் பேசிக்கலாம். மொதல்ல சாப்பிடுங்க. தோசை ஆறிட்டா நல்லா இருக்காது. சாப்புடுங்க"

தோசையிலிருந்து எழுந்த மணம் அவனது வெட்கத்தை உதறவைத்தது. பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்று யாரும் சும்மா சொல்லி வைத்துவிடவில்லை.

அவன் மவுனமாக உண்டான். அவன் தட்டில் தோசை காலியாக, காலியாக மேலும் சூடாய் தோசைகளை ஒரு கிழவி எடுத்து வந்து கொடுத்துக் கொண்டேயிருந்தாள். வயிறு நிரம்பியது.

"போதும்" என்று தட்டின் மேல் கை வைத்து மறித்தான். தண்ணீர் குடித்தான்.

"காப்பி" என்று ஒரு தம்ளரை நீட்டினாள். அதையும் குடித்தான். உண்மையிலேயே இது மதனகாமராஜன் கதை நிகழ்ச்சிதான்.

இல்லாவிட்டால் அப்சரஸ் போல் ஒரு பெண், பிச்சைக்காரனைப் போன்ற அவனுக்கு இவ்வளவு பணிவிடைகள் செய்வானேன்.

அவள் மெல்ல ஒரு சிரிப்பு சிரித்தாள். அவளது உதடுகளில் ரசிக்கக்கூடிய சின்னச் சின்ன கோடுகள் எல்லாம் அவள் சிரிப்பில் விரிந்தன. அபாரமான அதரங்கள். அந்தச் சிரிப்பும் அவன் நிலையைப் பார்த்து சிரித்தாற்போலத்தான் அவனுக்குப் பட்டது.

"எம்பேரு பாரதி" என்றாள்.

"உம்"

"உங்க பேரைச் சொல்லலியே"

"சுந்தரமூர்த்தி"

"எல்லாரும் சுந்தரமூர்த்தின்னு முழுசாவா கூப்புடுவாங்க? வாய் வலிக்காது?"

"சுந்தர்னு கூப்பிடுவாங்க"

"நான் யாரு? எதுக்கு உங்களுக்குத் தோசை கொடுத்தேன்னு எல்லாம் நீங்க கேக்கலியே"

"எனக்கு என்ன நடக்குதுன்னு எனக்குப் புரியலை. இது கனவா இல்லை நனவான்னு கூடத் தெரியலை. அதனால் இன்னும் கொஞ்சம் நேரம் கழிச்சிப் பார்த்தா நான் நாகேசுவரன் கோயில் கல் தேர்கிட்டக் கிடப்பேன்னு தோணிச்சி. அதான் கேக்கலை"

அவள் மறுபடி சிரித்தாள். கபடமில்லாத கலகல சிரிப்பு.

"இது கனவெல்லாம் இல்ல. நிஜம்தான். இது எங்க வீடு. எங்க வீட்டுக் கட்டிலல நீங்க இருக்கீங்க"

"நீங்க யாருன்னு சொல்லலியே"

"நீங்க கல் தேருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கீங்க. திடீர்னு அப்படியே சாய்ஞ்சி விழுந்துட்டீங்க. உங்க மோவாய் கல்லுல இடிச்சி இரத்தம் கொட்ட ஆரம்பிச்சது. நானும் சூர்யாவும் நீங்க விழுந்ததைப் பார்த்தோம். கோவில் வாசல்ல கார்ல டிரைவர் இருந்தாரு. அவரைக் கூட்டிக்கிட்டு வந்து உங்களைத் தூக்கிக்கொண்டு இங்க வந்து படுக்க வச்சோம். டாக்டர் வந்து பார்த்தாரு. கட்டுப் போட்டாரு. பசி மயக்கம்னு சொன்னாரு. அதனால்தான் தோசை சுட்டுக்கொண்டு வரச்சொன்னேன்"

"நீங்க ஏதாவது பெண்கள் சங்கம் வைச்சிருக்கீங்களா?"

"இல்லியே. ஏன்?"

"பின்ன கோயில்ல விழுந்தவனுக்கு இவ்வளவு பண்ணியிருக்கீங்களே. ரொம்ப பெரிய மனசு இருக்கணும் அதுக்கு"



"அப்படி இல்ல. சூர்யா உங்ககிட்ட மன்னிப்பு கேக்கணும்னு சொன்னா. உங்களைக் கோயில்ல பார்க்கலாம்னு அவள்தான் எங்கிட்ட சொன்னா. தனியா வந்து உங்ககிட்ட பேச அவளுக்குக் கூச்சமா இருந்திச்சி. அதனால்தான் என்னைத் துணைக்குக் கூப்புட்டா. சூர்யாவும் நானும் ரொம்ப நெருக்கமான தோழிங்க. அவள் சொன்ன மாதிரியே கோயில்ல உங்களைப் பார்த்தோம். உங்ககிட்ட பேசலாம்னு வந்தப்பதான் நீங்கள் மயங்கி விழுந்திட்டீங்க. காலைல இருந்து ஒண்ணும் சாப்பிடலயா?"

"சூர்யா யாரு?"

"உங்களுக்குத் தெரியலை?"

"இல்லியே" என்றான் அவன் புதிரான குரலில்.

"வா சூர்யா, பேசணும், பேசணும்னியே. மன்னிப்பு கேக்கணும் கேக்கணும்னியே. இப்ப ஒளிஞ்சிக்கிட்டு நின்னா என்ன அர்த்தம்? வாயேன்" என்று அறை வாசல் பார்த்துக் குரல் கொடுத்தாள் பாரதி. "சூர்யா வேற யாருமில்ல, உங்க மேல எச்சிலை போட்டவள்" என்றாள் சுந்தர் பக்கம் திரும்பிப் பார்த்து.

"ச்சீ, திமிரைப் பாரு. எண்டி மொத மொதல்ல சொல்றப்பவே என்னைப்பத்தி இப்படித்தான் சொல்லணுமா?" என்று கேட்டுக்கொண்டே வந்து பாரதியின் தொடையைக் கிள்ளினாள் அந்தப் பெண், சூர்யா.

சுந்தர் முந்தைய தினம் கோயிலிலும், பின் இரவில் பெரிய சவுராஷ்டிர தெருவிலும் பார்த்துக் கிளர்ச்சியடைந்த அதே பெண்.

சுந்தருக்குத் தடுமாற்றமாய் இருந்தது. இவ்வளவு நெருக்கத்தில் எந்தப் பெண்ணிடமும் அவன் இப்படிப் பேசியதில்லை. வாயடைத்துப் போனான். வெறும் தரித்திர தேவதை மட்டுமே அண்டுபவன் என்று தன்னைப் பற்றி அவன் நினைத்துக் கொண்டதெல்லாம் தவறு. அவனைத் தேடி

லட்சுமிகளும் வருகிறார்கள்.

"தயவு செய்ஞ்சி தப்பா எடுத்துக்காதீங்க" என்றாள் சூர்யா.

"நான் எதையும் தப்பாவே எடுத்துக்கல"

"இல்ல, நான் பார்க்காம வந்து இலையை வீசி எறிஞ்சிட்டேன். அந்த நேரத்துல வீட்டுக்குள்ள தேள் ஓடுதுன்னு சமையல்காரம்மா கத்துனாங்க. அந்த பரபரப்புல நாம்பாட்டுக்குச் சுத்துமுத்தும் பார்க்காம இலையை வீசி எறிஞ்சிட்டேன். உங்க மூஞ்சில கோபத்தைப் பார்த்தேன். யாருக்கும் வர்றதுதான். என்னைப் பார்த்தவுடனே நீங்க பாட்டுக்கு கோபத்தை அடக்கிட்டுப் போய்ட்டீங்க. இருந்தாலும் தப்பு, தப்புதான். உங்களைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லாட்டா நல்லாயிருக்காதுன்னு தோணிச்சி. நீங்க கோயிலுக்கு வர்றவங்கன்னு தெரியும். அதனால்தான் பாரதியைக் கூட்டிக்கிட்டு வந்தேன்"

"உங்க முழுப் பெயரே சூர்யாதானா?" என்று கேட்டான் சுந்தர்.

"இல்ல, சூர்யகுமாரி, எங்கப்பா வைச்ச பேரு. அவருக்குப் புதுசு புதுசா பேர் வைக்கணும்"

அவள் தலைகுனிந்து மெல்லிய குரலில் சொன்னாள். பெயருக்காக வருந்துகிறாளா, மகிழ்வுறுகிறாளா என்று தெரியவில்லை.

சுந்தருக்கு வீட்டு ஞாபகம் வந்துவிட்டது. காலையில் வெளியேறியவன். சர்க்கரை வாங்கித் தருவதாகச் சொல்லி, சர்க்கரையும் வாங்கவில்லை. ஒன்றும் வாங்கவில்லை. நேரம் வேறு ஆகிவிட்டது.

"நீங்க என்னை இப்படிக் கொண்டு வந்து ஒத்தாசை பண்ணதுக்கு என்ன வார்த்தை சொல்றதுன்னே தெரியலை"

"ஒரு வார்த்தையும் சொல்ல வேணாம்" என்றாள் பாரதி. முத்துச்சிப்பிக்குள் இமை கொண்டவள்.

"நான் பொறப்படறேன்"

"வாசல்ல கார் ரெடியா இருக்கு. நீங்க



உங்க வீடு வரைக்கும் நடந்து போக வேணாம்"

"புதுத் தெரு பக்கத்திலதான் இருக்கு"

"யார் சொன்னது?"

"பின்ன, பெரிய சவுராஷ்டிரா தெருவில் இருந்து புதுத் தெரு பக்கந்தானே?"

"நீங்க இருக்கறது துவராங்குறிச்சியில. ஏ.ஆர்.ஆர். தெரு. இந்தக் கோடில. உடம்பு முடியாம இருக்கறப்ப வெக்கமெல்லாம் பார்க்க வேணாம். போய்ட்டு வாங்க"

வீட்டு வாசலில் டிரைவர் காரை நிறுத்தியபோது மணி எட்டுக்கு மேலேயே ஆகியிருக்கும் என்று தோன்றியது.

கார் நிற்கும் ஒலி கேட்டு சின்ன அண்ணி வீட்டு வாசலுக்கு வந்துவிட்டாள். டிரைவர் உடனே இறங்கி, சுந்தர் இறங்குவதற்காகப் பின் கதவைத் திறந்து விட்டான். சின்ன அண்ணியின் முகத்தில் உடனே ஒரு குரோதம் படருவதை அவனால் உணர முடிந்தது. நாலு எழுத்துக் கூடப் படித்தால் கார்ச் சவாரி கிடைத்து விடுமோ என்ற அவளது சந்தேகம் அவள் முகத்தில் தெரிந்தது. சுந்தர் மிகவும் தர்மசங்கடமாய் உணர்ந்தான். எதற்கு கார் அது இது என்று அவர்கள் அமர்க்களப்படுத்த வேண்டும்?

"ஐயா, இந்தாங்க" என்று டிரைவரின் குரல் கேட்டது.

"என்னது?" என்று கார்க் கதவைச் சாத்திவிட்டுத் திரும்பினான் சுந்தர்.

"சர்க்கரைப் பை, உங்ககிட்ட அம்மா கொடுக்கச் சொன்னாங்க" என்று டிரைவர் நீட்டினான்.

வீட்டில் இருந்து சர்க்கரை வாங்க அவன் எடுத்துப் போன பைதான். அது காலியாய் இல்லை. அதில் நிலாவை வைத்துத் திணித்த மாதிரி சர்க்கரை தெரிந்தது. அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. எதையும் வெளிக்காட்ட இயலவில்லை. கையில் வாங்கிக்கொண்டு, தலையை வெறுமனே

ஆட்டினான். கார் போய்விட்டது. அவன் வழியை மறிக்கிற மாதிரி நின்றிருந்த சின்ன அண்ணியிடமிருந்து ஒதுங்கி உள்ளே போனான்.

சர்க்கரை அவன் வாங்கவில்லை என்று அவர்களுக்கு எப்படித் தெரிந்தது? எப்படி வாங்கினார்கள்? ரேஷன் கார்டு எங்கே என்று பார்த்தான்! சர்க்கரையிலேயே அது செருகப்பட்டு இருந்தது.

"இந்த வீடு ஒண்ணும் சத்திரம் இல்லேன்னு சில பேருக்குத் தெரிஞ்சா நல்லா இருக்கும்"

"நான் வெளியில சாப்பிட்டுவிட்டேன்" என்றான்.

"சாயங்காலங்கூட வீட்ல வெல்லக்காப்பி தான்"

"தஞ்சாவூருக்குப் போயிட்டேன். வேலை விசயமா"

"ஆமா, கலெக்டரு நாற்காலி காலியா இருக்குன்னு காலைல என் காதிலயும் சேதி விழுந்திச்சி"

அவன் அதற்குமேல் பேசப் பிரியப்பட வில்லை. முற்றத்தில் இறங்கி கைகளைக் கால்களைக் கழுவிக் கொண்டான். சட்டையைக் கழற்றி நடையில் இருந்த துருப் பிடித்த ஆணியில் மாட்டினான்.

தறிமேடை காலியாக இருந்தது. இரண்டு அண்ணன்களும் ஏதாவது சினிமாவிற்குப் போயிருக்கலாம் என்று தோன்றியது. தறிமேடையில், முண்டா பனியனுடன் உட்கார்ந்திருந்தான். சிகாபுக், சிகாபுக் என்று துணியை நெய்யத் தொடங்கினான்.

"அட, புலி புல்லைப் போய்த் திங்குதே" என்று பொய்யான ஆச்சரியக்குரலில் சின்ன அண்ணி சொன்னாள்.



# பருவகாலக் கனவுகள்! 6

விடியற்காலையில்தான் தறிமேடையில் இருந்து எழுந்தான். அவன் அவனுக்குத் திருப்தியாய் இருந்தது. வேலை பாவுநூல். முடிச்சில்லை. நன்றாக நல்ல விடப்பட்ட ஈரிழை என்பதால் முறுக்கி வில்லை. கண்டிலிருந்து ஊடுநூலும் அறுபட ரெயிலின் பிஸ்டன் போல் போய் வந்தது. அறுபடவே இல்லை. அதனால் ஓரிரவில் இரு ஆள் வேலை ஓடியது. சோம்பேறி அண்ணன்கள் இதற்காகத்தான் அவனைத் தறிமேடையில் அமர்த்த ஆசைப்பட்டார்கள். உழைப்பு அவனுடையது. கூலி அவர்களுடையது. இனி அண்ணன்கள் இருவரும் செலவுக்கென்றும் புதிதாக வேறு ஒரு பழக்கத்தையும் கற்றுக் கொள்வார்கள். போகட்டும். அவன் வாழ்க்கை தறிமேடையில் கழிந்துவிடப் போவதில்லை. இது தற்காலிகம்தான். அவனுக்கென்று ஒரு வழியை அவன் தேடிக்கொள்ளுமட்டும் அவன் உழைப்பில் அவர்கள் குளிர் காயட்டும்.

ஆற்றுநீரில் முங்கி முங்கி எழுந்தான். வீட்டுக்கு வந்தான். தட்டில் இட்லிகள் இருந்தன. சட்னி இருந்தது. இட்லிகள் சூடாய் இருந்தது. அவனுள் ஆச்சரியத்தை எழுப்பியது. யுகமாற்றம் ஏற்பட்டுவிட்டது. சாப்பிட்டான். சர்க்கரைக் காப்பி. குடித்தான்.

படுத்தான். ஞானிகளுக்கு உறக்கம் வருகிற மாதிரி உடனே உறங்கிப் போனான். பிற்பகல் இரண்டு மணிக்கு ஆத்தை இராமசாமி திண்ணையில் படுத்துக்கிடந்த அவனை எழுப்பினான்.

"என்ன மாப்ளே, விருந்து பலமா?" என்று கேட்டான்.

"என்ன இந்த நேரத்தில் இங்க. கடையில உட்காரலை?"

"ஊர்வலம் விடறாங்க. பாத்திரமெல்லாம் பத்திரமா இருக்கணும்னு கதவை அடைச்சிட்டோம். சினிமாவுக்குப் போறோன். வரியா?"

அவனுக்காக ஒரு தடவையாவது செலவு செய்ய வேண்டும். நேற்று சர்க்கரை பணத்தில் தஞ்சாவூர்ப் போக தேட்டம் போட்டது போக மிச்சமிருக்கும்.

"சரி வா போகலாம்" என்று எழுந்து கொண்டு உள்ளே போய் முகம் அலம்பினான்.

"சாப்பாடு ஆயிட்டது. வெளியே போறதுனா சாப்பிட்டுப் போ" என்றான் சின்ன அண்ணன்.

குரலில் கொஞ்சம் கருணை கலந்திருந்தது. பின்னே! இரண்டாள் வேலையல்லவா ஓர் இரவில் அவனால் முடிந்திருக்கிறது. பசியிருந்தது என்று சொல்ல முடியாது. சின்ன அண்ணன் பேச்சைக் கேட்காமல் போனால், "மதிக்கவில்லை" என்று அண்ணி சொல்லுவாள். அதனால் அவசர அவசரமாக சாப்பிட்டான். பூண்டு போட்ட முழுக் கடலைக் குழம்பு. மோர் சாதம், ஐந்து நிமிடங்கள் போதுமானதாக இருந்தது.

"ஆந்தைகூட சினிமாவுக்குப் போறேன்" என்றான் சின்ன அண்ணனிடம்.

சின்ன அண்ணன் தலைக்குமேல் மாட்டியிருந்த பையில் இருந்து ஒரு பத்து ரூபாயை எடுத்து நீட்டினான்.

"இந்தா செலவுக்கு வைச்சிக்க..."

யுகமாற்றம்தான். வாங்கிக்கொண்டு, நடையிலிருந்த சட்டையை எடுத்து மாட்டினான். பையில் பணம் வைக்கக் கையை நுழைத்தபோதுதான் பை ஏற்கனவே காகிதங்களால் அடைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. என்ன இது என்று கையில் அகப்பட்டதை துழாவி எடுத்து வெளிச்சத்தில் பார்த்தான். ஐம்பது ரூபாய் நோட்டும், ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களும் இருந்தன. கூடவே நேற்றைய சர்க்கரைக்



காசின் மிச்சம். எது இது? பாரதி, சூர்யாவா ஞாபகம்தான் வந்தது. திடீரென அவன் ஜாதகத்தில் சுக்கிரதிசையோ என்னவோ! பாரதி, சூர்யா மேல் கோபம்கூட வந்தது. இது என்ன சிறுபிள்ளை விளையாட்டு! அவனை என்ன பிச்சைக்காரன் என்று நினைத்துக் கொண்டார்களா? நன்றி சொல்ல வந்தவர்கள் சொல்லிவிட்டுப் போக வேண்டியது தானே. அவர்களிடம் இந்தப் பணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டும்.

இராமசாமி தெருவில் பாண்டி ஆடிய பெண் பிள்ளைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வயதுக்கு வந்தவர்களில் வெகுளியாய் இருந்த பெண்கள் எல்லாம் இந்தத் தெருவில் இருந்தார்கள்.

சுந்தர் அவன் பின்னந்தலையில் தட்டினான். இராமசாமி திடுக்கிட்டுத் திரும்பினான்.

"வாடா" என்றான்.

அவனது திருட்டுத்தனம் அம்பலமானதால் ஏற்பட்ட சங்கடத்தில் இராமசாமி அசடுதட்ட நடந்தான்.

அன்றைய சினிமாவிற்கான காசையும், அப்புறம் காப்பி செலவுக்கான காசையும் சுந்தரே கொடுத்தான். இடைவேளை நேரத்தில் இராமசாமி ஒரு சிகரெட் புகைத்தான். சுந்தரிடம் ஒன்று நீட்டினான். சுந்தர் முதலில் மறுத்தான். அப்புறம் லேசான சபலத்தை வெல்ல முடியாமல் இவனும் பற்ற வைத்தான்.

சினிமா விட்டு வெளியே வந்ததும் இராமசாமி ஏதோ அவசர வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டு, மோட்டார் சைக்கிளில் வந்த நண்பன் ஒருவனின் முதுகில் ஏறிக்கொண்டு போய்விட்டான். அவர்கள் இருவரும் சிரித்துப் பேசியதும், சுந்தரை விலக்குவதற்காக திடீரென ஏதோ நொண்டிச் சமாதானம் ஒன்றைச் சொல்லி, இராமசாமி அவன்பின் போனதும் சுந்தருக்குப் புதிராக இருந்தது. சிகரெட்டைத் தவிர

அவனிடம் இன்னும் வேறு என்னவோ செயல்கள் ஒளிந்திருக்கின்றன.

சுந்தருக்குத் திடீரென்று நட்பின் பொருளே புரியாமல் போய்விட்ட மாதிரி இருந்தது. சுந்தர் எப்படி சினிமாவிற்கு டிக்கட் எடுத்தான் என்று அவன் கேட்பான் என்று எதிர்பார்த்தான். கேட்கவில்லை. பையில் இன்னும் நூறு ரூபாய் கனமாக இருந்தது. தாங்க முடியவில்லை. பணத்தை எங்கே சென்று திருப்பித் தருவது? பெரிய சவுராஷ்டிரா தெரு வீட்டிற்குப் போயா? இல்லை ஏ.ஆர்.ஆர் தெருவிற்குப் போயா? பணம் திருப்பிததரும் சாக்கில் மறுபடி வீட்டுக்கு வந்ததாக அவர்கள் நினைத்தால்?

கோவிலுக்குப் போவது என்று தீர்மானித்தான்.

அவன் கோயிலில் நுழையும்போது, வெயில் மிச்சம் அவன் முகத்தில் தங்கிய நீர்த்துளிகளை முற்றிலுமாக துடைத்து விட்டன. கல்தேர் அருகில் போய் அமர்ந்தான்.

இராத்திரிக்குத் தறிவேலை காத்திருக்கும். இன்றைக்கும் அரக்கனைப் போல வேலை செய்ய வேண்டும். அவன் ஒன்றும் தறி வேலைக்காகக் கவுரவம் பார்க்கவில்லை என்று அண்ணன்கள் இருவரும் உணர வேண்டும். அதெல்லாம் உணர்ந்துதான் இருப்பார்கள். அவன் தறிவேலை செய்வதால், அவனுக்கென்று ஒரு கூலித்தறி பிடித்து அவனுக்கு வேலைகளில் உதவ என்று ஒரு பெண்ணையும் அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிடப் போவதில்லை. அவன் மூலம் ஒரு நாலு காசு பார்க்க வேண்டும் என்பதுதான் அவர்கள் நோக்கம். கூலித்தறி பிடித்துத் தந்தால் அப்புறம் அவன் கையை மீறிப் போய்விடுவான் என்ற பயம் அவர்களுக்கு.

கோயிலில் என்ன விழாவோ தெரியவில்லை. கோயிலுக்கு வழிமறந்தவர்கள் எல்லாம் வந்து கொண்டிருந்தார்கள். கோகிலா அண்ணிகூட கண்ணில் தென்பட



டான். அவளும் அவனைப் பார்த்துவிட்டாள். இருபபதிலேயே பெரிய அண்ணி கெட்டிக்காரி. அண்ணன் அவளுடைய 'மூத்தாளை முடிச்சில இருக்கிறானோ என்று பார்த்தான் சுந்தர். இல்லை. அவிழ்த்து வீட்டில் போட்டுத்தான் வந்திருக்கிறான். கல்யாணத்தின்போது. கோகிலா அண்ணி ஒல்லி. அவளை ஒல்லி விளக்குமாறு என்றுகூட அவன் கிண்டலாய்ப் பேசியிருக்கிறான். அப்போது அவன் சின்னப்பையன். அதனால் அவன் பேச்சு அவள் மனதைக் குத்தவில்லை. இப்போது அண்ணி அப்படி இல்லை. நன்றாகப் பெருத்திருந்தாள். இடுப்பும் வயிறும் இணைந்திருந்தது. கழுத்தில் சதை அதிகமாகி தலை தோளில் அழுந்திப்போன மாதிரி தெரிந்தது.

"சுந்தர்! என்ன நல்லா இருக்கியா?"

"இருக்கேன் அண்ணி"

"அந்த இராட்சசிங்க உனக்கு சோறு போடறாங்களா இல்லையா? ஏன் இப்படி மெலிஞ்சி போயிட்டே..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லியே நல்லாத் தானே இருக்கேன்" என்றான் அவன் விட்டுக்கொடுக்காமல்,

"என்னவோ போ படிச்ச பையனைப் போய் இராத்திரி முழுக்கத் தறில உக்கார வைக்கறது அப்படி ஒண்ணும் நல்லதில்ல. நீ நம்ம வீட்டுக்கு வந்துடுன்னா கேக்க மாட்டேங்கறே"

அவன் மையமாகச் சிரித்தான். "வரேன் அண்ணி, வராம எங்கே போயிடுவேன்"

அங்கே போனால்தான் தெரியும். 'பெரிய அக்கா' பதவி பெற்றஅண்ணி இப்போது தன் கொடுக்கல் வாங்கலை தாராசுரம், சுவாமிமலை, பாபனாசம், அய்யம்பேட்டை என்று விஸ்தரித்திருக்கிறாள். காசு வசூலுக்கு அவளுக்குத் தோதான ஆள் இல்லை. அண்ணன்தான் அசட்டுச் சிரிப்போடு டவுன்பஸ்சில் ஏறிப் போகிறான். படித்த பையன் வட்டி வசூலுக்குப் போவ

தில் தப்பில்லை என்று அஸ்ணி அவனை ஏசத் தொடங்குவாள். அவனைப் பரிபூரண அடிமையாக்கிவிடுவாள்.

மேலும் சற்று நேரம் அவள் கட்சிக்கு ஆதரவாய் அவன் வாக்கைப் பெற்றுவிடும் பிரசாரத்தில் சற்று நேரம் தீவிரமாக ஈடுபட்டுவிட்டுப் போனாள்.

சுந்தர் மதகு மூடப்பட்டு, நீர் வரத்து திடீரென நின்றுபோன மாதிரி உணர்ந்தான். வவ்வால்கள் காவல் காக்கத் தொடங்கின. ஒரு விநாடிகூட தயங்காமல் தங்கள் 'பார்க்'களைத் தொடங்கின. புறாக்கள், பக்கூம், பக்கூம்' என்றன. ஆண் பெண்ணை அழைக்கிறதா... பெண் ஆணை அழைக்கிறதா?

மெல்ல இருள் கவிழ்ந்து கொண்டிருந்தது. சுந்தருக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்தப் பெண் சூர்யா வரப்போவதில்லை. மெல்ல எழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். நிழல் நிழலாய் தெரிந்த உருவங்களில் சூர்யாவும் இல்லை. பாரதியும் இல்லை. கோவிலுக்குள் நுழைந்து, சிவலிங்கத்தின் முன் நின்று கண்களை மூடித் தொழுதான். 'எனக்காக என்னவிதமான பூனையை உன் சாக்குப் பையில் மறைத்து வைத்திருக்கிறாய்?' என்று நாகேசுவரனைக் கேட்டான். கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியிருக்கும் உட்பிரகாரத்தைச் சுற்றி வந்தபோது, "இன்னிக்கு பசி மயக்கத்தில் இல்லையே?" என்ற குரல் கேட்டு, கிளர்ச்சியும், திடுக்கிடலையும் ஒருசேர அனுபவித்துத் திரும்பிப் பார்த்தான்.

அரைகுறை வெளிச்சம் என்றாலும் சூர்யாவை உடனே அடையாளம் தெரிந்தது அவனுக்கு. அவளைக் கோபிக்க வேண்டும். அவள் அவன் அறியாமல் வைத்த பணத்தைத் திருப்பித் தர வேண்டும் என்று நினைத்ததெல்லாம் மறந்துவிட்டது அவனுக்கு. கிடைத்தற்கரிய காட்சி கிடைத்துவிட்ட மாதிரி அவளைப் பார்த்தான். அவள் முகத்தில் குறுநகை இருந்தது.



"நீங்க மட்டும்தான் வந்தீங்களா?"

"ஏன்?"

"இல்ல, உங்க தர்ம சங்கத்தோட தலைவி வரலையான்னு கேட்டேன்"

"அப்படின்னா?"

"அதான் என் சட்டைப்பைல நூறு ருவா. துணிப்பைல சர்க்கரை எல்லாம் போட்டு என்னை இராப் பிச்சைக்காரனைவிட மோசமா நெனைச்சிட்டீங்களே?"

அவள் முகம் வாடிப்போனது. அவள் முகம் வாடியது கண்டு அவனுக்கும் வேதனையாகி விட்டது. தன் சொல்லம்பு அவளை இவ்வளவு காயப்படுத்தும் என்று அவன் கருதவில்லை. சரிக்குச் சரியாக அவள் ஏதாவது வாயாடுவாள் என்று எண்ணப் போக அவள் இப்படி விஷ அம்பால் தாக்கப்பட்டது போல் வாடியவுடன் பதறிப்போனான் அவன்.

"நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்" என்றான் சுந்தர். அவர்கள் இருவரும் இப்போது கோவிலின் கல் தேரின் விலாப் பகுதியில் இருந்தார்கள். அந்த இடத்தில் வெளிச்சம் மட்டு, அதுவுமன்றி அந்த இடத்தை யாரும் அடிக்கடி கடந்து போவதுமில்லை.

"ஆம்பளைங்க வறட்டு கவுரவம் பார்க்கறவங்கறது சரியாத்தான் இருக்கு"

"அப்படின்னா?"

"ஒண்ணுமில்ல"

"சரியாச் சொல்லுங்களேன்"

"மொதல்ல நீங்க என்னை வாங்க, போங்கன்னு சொல்றதை நிறுத்துங்க. நல்ல பாட்டுல கீறல் விழுந்தா மாதிரி இருக்கு! நான் இப்பத்தான் பள்ளிக்கூடப் படிப்பை முடிச்சிருக்கேன். நீங்க காலேஜ் படிப்பையே முடிச்சவங்க"

அது வேண்டுகோளா, ஆணையா என்று பகுத்துப் பார்க்க முடியவில்லை அவனால். இருந்தும் ஆனந்தமாகத்தான் இருந்தது. விளக்கின் கவர்ச்சி விட்டிலை ஈர்ப்பது போல, ரெயிலின் கவர்ச்சி மனிதனை

ஈர்ப்பது போல, யானை கவர்ச்சிக்கு குழந்தை அடிமையாவதைப் போல அவனும் கவரப்பட்டான்.

"சரி, சொல்லு. நான் என்ன வறட்டு கவுரவம் பார்த்தேன்"

"நீங்க படிச்சிட்டு வேலையில்லாம இருக்கறவருன்னு எனக்குத் தெரியும். அண்ணனுங்ககிட்டயும், அண்ணிங்ககிட்டயும் பேச்சு வாங்கி அவதிப்படறவர்ங்கறதும் எனக்குத் தெரியும்"

"இதெல்லாம் எப்படி உனக்கு?"

"நீங்க சாமியைப் பார்க்க வந்தீங்க. பொண்ணுங்கதான் தங்களுக்கு நல்ல கணவன் வேணுங்கறதுக்காக சாமி கும்பிட வருவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். நீங்க தினம் வந்தீங்களா? நல்ல பொண்ணு வேணும்னு வேண்டிக்க வந்தீங்களான்னு நான் பார்த்துக்கிட்டு இருந்தேன். நீங்க பொம்பளைங்கள பார்க்கலே. சரி, உங்களுக்கு மனசில வேதனை. அதுக்காகத்தான் கோயிலுக்கு வர்ரீங்கன்னு நினைச்சிக்கிட்டேன். ஒரு தடவை உங்க அண்ணனோட பாவு வாங்கிட்டுப் போக எங்க வீட்டுக்கு வந்தீங்க. நான் அப்பவே உங்களைப் பார்த்திருக்கேன். கோயில்ல பார்க்க ஆரம்பிச்சதும் உங்களைப் பற்றி நான் ஜாடை மாடையாகக் கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டேன்"

"சரி, நான் படிச்சிட்டு வேலையில்லாம இருக்கேன். ஏழைதான், அதனால வறட்டு கவுரவம் பார்க்கறவன்னு எப்படிச் சொல்றே"

"உங்ககிட்ட காசில்ல. அதை நான் குடுத்தேன். பாரதிகூட குடுக்கலாம்னு சொன்னா. அதப்போய் இராப்பிச்சைக்காரன் அது இதுன்னு சொல்லிக் காட்டணுமா? காசு இன்னிக்கு இருக்கும், நாளைக்குப் போகும். ஆனா நீங்க கஷ்டப்படற நேரத்துல உங்ககிட்ட அது கொஞ்சம் இருந்தா நீங்க கஷ்டப்பட மாட்டீங்கன்னுதான் நான் கொடுத்தேன். நான் ஒண்ணும் காசு திமிர்ல கொடுக்கலே"



"பின்னே?"

"நான்தான் நல்ல கணவன் வேணும்னு வேண்டிக்கறதுக்காகக் கோவிலுக்கு வந்தேன்னு சொன்னேனல்ல"

"அப்படின்னா?"

"இதுக்கு மேல நான் சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்களா?"

"இல்ல சூர்யா. அவ்வளவுக்குகூடப் புரியாவன் இல்ல நான். உன்னை மொதல்ல பார்த்தப்ப எனக்கும் அந்த மாதிரிதான் நினைப்பு வந்தது. அப்புறம் நானே என்னை சமாதானப்படுத்திக்கிட்டேன். இந்த மனசு ஒரு குரங்கு. அது நல்லா இருக்கறதையெல்லாம் எடுத்து வைச்சிக்க சொல்லும்... அது சொல்றதைக் கேக்கக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்"

"ஏன்?"

"உனக்குப் புரியலையா? நீ பெரிய வீட்டுப் பொண்ணு. பெரிய இடத்துல சம்பந்தம் தேடுவாங்க உனக்கு. நான் கூலித் தறிக்காரன். கையில் காசில்லாதவன். வேலையில்லாதவன். உன்னை வைச்சி எப்படிக் காப்பாத்துவேன்? உனக்கு நூறு ரூபாய் சின்ன விசயம். ஆனா எனக்கு அது ரொம்பப் பெரிய விஷயம் இல்லியா?"

"ஏன் என்னுது, உன்னுதுன்னு சொல்றீங்க. என்னது உங்களது இல்லியா? உங்களது என்னுது இல்லியா?"

"என்னுதுன்னு எங்கிட்ட என்ன இருக்கு?"

"உங்க குணம். உங்க பொறுமை. உங்க மனசு"

"நிறைய சினிமா பார்ப்பியா?"

"அதெல்லாம் இல்ல. நான் உள்ளதைத்தான் சொல்றேன்"

"அப்படின்னா உன் தலையிலயும் கஷ்டப்படணும்னு பிரம்மா எழுதி வைச்சிருக்கான்"

அதெல்லாம் இல்ல. காசங்கறது ரொம்ப சாதாரண விஷயம். மொதல்ல கொஞ்சம் சேர்றதுதான் சிரமமாயிருக்கும். கொஞ்சம்

சேர்ந்துட்டாப் போதும். அது தானா குட்டி போட ஆரம்பிச்சிடும்"

"மொதல்ல கொஞ்சம் சேரணுமே"

"சேரும்"

"சூர்யா..."

"நான் கோவிலுக்கு வந்ததே எனக்கு ஒரு நல்ல கணவன் வேணும்னு வேண்டிக்கத் தான்னு சொன்னேனே இல்ல. எனக்கு சாமிதான் கொடுத்திருக்கு"

"என்னை?"

"ஆமா"


"சரி. அந்த சாமி எங்கிட்டயும் உன்னைக் கொடுக்கட்டும். அப்புறம் நான் ஒத்துக்கறேன்"

"அப்படின்னா சரி" என்று அவள் பட்டுக் கத்தரிக்கிற மாதிரி விலகிப் போனாள்.

அவனுக்குப் பதைப்பாய் இருந்தது. இரைந்து அவளைக் கூப்பிடவும் அச்சமாய் இருந்தது. அவள் விரோதித்துக் கொண்டு போகிறாளா, துன்பம் கொண்டு போகிறாளா என்று உணரமுடியவில்லை. பெரிய ஐஸ் கட்டி ஒன்றை அவன் தலையில் இறக்கி விட்டுப் போய்விட்டாள். அவன் மனதில் என்னவோ ஒரு எக்காளம் ஒலித்துக் கொண்டுதானிருந்தது. அவனாலும் ஒரு பெண் மனதை வெல்ல முடியும் என்ற ஆண் கர்வம் ஏற்றிவிட்ட எக்காளம். அவன் நினைவில் அவனது மனம் யானை மேல் அம்மாரி அமைத்து, துந்துபி, பேரிகை எல்லாம் முழங்க ஒருபுறம் ஊர்வலம் போனது. இன்னொருபுறம் நெருப்பால் சுடப்பட்டப் புழுவாய்த் துடித்தது. இது என்ன இந்தப் பெண், இவ்வளவு அறியாதவளாய் இருக்கிறாளே. உலகைப் பற்றி ஒன்றும் தெரியாதவளாய் இருக்கிறாளே. அவள் பொம்மைக்கு ஆசைப்பட்டிருந்தால் பரவாயில்லை. காருக்கு ஆசைப்பட்டிருந்தாலும் பாதகமில்லை. அன்னக்காவடிக்கு ஆசைப்பட்டு விட்டாளே. நடக்கக்கூடியதா இது? அவனுடைய அப்பா பெரும் முத



லாளி. சொந்தத்தில் இருநூறு தறி போட்டிருப்பவர். பட்டுச் சேலை தயாரித்து மொத்தமாய் விற்பவர். பன்னீரில் வாய் கொப்பளிப்பவர். அவரிடம் போய், அம்மை, அப்பன் இல்லாத அனாதையான அவன் பெண் கேட்டால் என்ன ஆகும்?



## பருவகாலக் கனவுகள்! 7

அடுத்த நாள் மாலையும் அவன் கோயிலில் இருந்தான். அங்கே போகக்கூடாதென அவன் எவ்வளவோ நினைத்துக் கொண்டும், கால்கள் அவனை அவனுக்கு எதிராகப் புரட்சி செய்து அங்கே போய்ச் சேர்ந்து விட்டன. கண்கள் கோயிலின் ஒவ்வொரு மூலையையும் உற்று நோக்கின. மனிதர்கள் இருந்தார்கள். சாமி இருந்தது. கல் தேர். சிங்கமுகக் கிணறு. புறா. வவ்வால் என்று எல்லாருமே, எல்லாமுமே இருந்தன. ஆனால் அவனுக்கு வெறுமைதான் தாக்கியது. அவள் இல்லை. 'நான் உன்னைத் தேடித்தான் வந்திருக்கிறேன் சூர்யா' என்று கத்த வேண்டும் போல் இருந்தது. என்ன மாயம் செய்தாள் அவள்? எப்படி மனதில் நுழைந்தாள்? ஓட்டைக்குள் ஒளி நுழைவது போல. நுழைவது உணரப்படாமலேயே நுழைந்து விட்டாள். கண்களில் கண்ணீர் வந்தது. மனம் புலம்பியது. அவனை பித்தாக்கி விட்டாள். அவனை நிறைய நாட்களாகப் பார்த்து வந்திருக்கிறாளாமே. அவனைப் பற்றி சர்வமும் தெரிந்து வைத்திருக்கிறாளாமே. அவ்வளவு தெரிந்து, அலசித் தானே அவள் தன் மனதை வெளிச்சம் போட்டுக் காட்டினாள். மரம் வைப்பவன் தண்ணீர் விடுகிறான். படைத்தவன் படியளக்கிறான். அவள் காதலை விதைத்தாள். அது தழைக்க அவளே வழி வைத்திருப்பாள். இல்லாவிடில் அவ்வளவு உறுதியாக இருந்திருப்பாளா? நடைமுறையை ஓங்கி

ஓங்கிப் பேசி, அவளைக் கொஞ்சம் கூட ஈவிரக்கமில்லாமல் துரத்தியடித்து விட்டானே. இனி அவள் எங்கே அவன் முகத்தில் முழிக்கப் போகிறாள். மான, ஈனத்தை விட்டு வந்து அவனிடம் காதலை யாசித்தவள் அவள். அச்ச, நாணத்தை மறந்து தன் மனதைத் திறந்தவள் அவள்.

"சூர்யா... சூர்யா..."

"கூப்பிட்டீங்களா?"

நிஜமாகவே அவன் முனகலுக்கு எதிர்குரல் கேட்டது. விதிர்த்துப் போய் பார்த்தான். சூர்யாதான். அவன் கண்களை மூடியிருந்ததில், அவனையறியாமல் பித்தனைப் போல் கல்தேர் விலாப்பகுதியில் சரிந்து உட்கார்ந்திருந்ததில் சுற்றுப்புறம் மறந்திருந்தான். அவள்தான் நின்றிருந்தாள். முகத்தில் அதே புன்முறுவல்.

"சூர்யா... சாமி என்கிட்டேயும் உன்னைக் கொடுத்திரிச்சி சூர்யா. இராத்திரி முழுக்க உன்னைச் சுமந்துகிட்டிருந்தேன்". காதல் மிருதியில் பிதற்றுவது தெரிந்ததும் அவன் சொன்னான். அது உண்மையில் காதல்தானா இல்லை இதுநாள் வரை அவன் எந்தப் பெண்ணிடமும் நெருங்கிப் பேசாததால் ஏற்பட்ட மிருதியான இனக்கவர்ச்சியா என்று தெரியவில்லை.

அவள் அழுதாள். சுந்தர் காரணம் கேட்கவில்லை. வெற்றியின் காரணமாக ஏற்பட்ட அழுகையாய் இருக்கும். அவளை எவ்வளவு அலைக்கழித்திருப்பான் ஓரிரவுக்குள்.

"உக்காரு சூர்யா..."

உட்கார்ந்தாள். அவளுடைய துணிவு அவனுக்கு திகைப்பை வழங்கியது. அவன் உடலில் இருந்த சோர்வெல்லாம் பறந்து போனது. சற்றுமுன் இருந்த வெறுமை நீங்கி, எங்கும் எங்கும் ஒளி நிறைந்த மாதிரி தோன்றியது.

"நீ பெரிய ஆளு சூர்யா"

"என்ன?"



"உன்னால நினைச்சதை சாதிக்க முடிஞ்சிருக்கு"

"என்னைப் புடிச்சி நெஞ்சில சுமந்திங்களா? இல்ல என் மனசு நோகக்கூடாதுன்னு அப்படி சொன்னீங்களா?"

"சத்தியத்தைச் சொன்னேன் சூர்யா"

அவள் உணர்ச்சி வசப்பட்டு அவன் கரம் பற்றினாள். அவன் மகிழ்வாய் உணர்ந்தான். துக்கமாய் உணர்ந்தான். அவளின் மென்மையான விரல்களை பற்றி அழுத்தினான். அவள் அந்த வேதனையைத் தாங்கினாள். வெகு இன்பமாக.

அப்புறம் அவர்கள் சந்திப்பு அவர்களுடைய தினப்படி வேலைகளில் ஒன்றாகி விட்டது. காதலிப்பதாகச் சொல்லிக் கொள்ளவில்லை. அர்த்தமற்ற உளறல்கள் இல்லை. ஒருவேளை தொடுகை இருந்திருந்தால் அந்த மாதிரி உளறல்கள் இருந்திருக்குமோ என்னவோ!

ஒருநாள் பாரதி பற்றி பேச்சு வந்தது. பாரதி அவளுக்குத் தோழி. பள்ளியில் சூர்யாவிற்கு அம்மா இல்லை. பாரதிக்கு அப்பா இல்லை என்று ஆகிவிட்டதால் அந்த இல்லாமை ஒருவிதத்தில் சேர்த்து விட்டது என்று சூர்யா பாரதி பற்றிச் சொன்னாள். பாரதிதான் முதலில் சூர்யாவின் காதலுக்கு தைரியம் சொன்னவள். ஆதரித்தவள். அவளும் பணம் படைத்தவள். அம்மா இல்லாத பெண். அப்பாவிடம் எது கேட்டாலும் நடக்கும் என்று உறுதி கூறியவள். அவனுடன் சூர்யா பேச ஆசைப்பட்ட போது, கூடத் துணைக்கு வந்தவள். எச்சிலை எறிந்ததற்கு மன்னிப்புக் கோருவது என்பதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு பேசலாம் என்று தந்திரம் சொல்லிக் கொடுத்தவள். பாரதியைப் பற்றி அவ்வளவு கேட்டு அவள் மேல் பரிவு, பொங்கி அவளை புகழ்ந்தான் சுந்தர். அவ்வளவுதான். சூர்யாவிற்குக் கோபம் வந்து விட்டது. என்ன

இருந்தாலும் தன் புதையலை அடுத்தவருக்கு விட்டுக் கொடுக்காத கருமி போல் அவனை கோபித்தாள். 'சூர்யா தப்பு தப்பு' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

'சரி, தப்புப் போட்டுக்கிட்ட வரைக்கும் போதும்" என்று அவன் கையைத் தடுத்தாள்.

"உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருது?"

"என் கஷ்டம் எனக்குத் தெரியும். என்னவோ பெரிய ரிசியசிருங்கர் மாதிரி முடியாதுன்னு சண்டிப்பண்ணீங்க. மல்லுக்கு நின்னுல்ல ஜெயிச்சிருக்கேன். உங்களை விட்டுக்கொடுக்க மனசு ஒத்துக்குமா?"

"எப்படி விட்டுக் கொடுப்பே? ஏன் விட்டு கொடுக்கறதுன்னு பேசறே?"

"என் மனசில புகுந்தது மாதிரி இன்னொருத்தர் மனசிலேயும் புகுந்துக்க மாட்டேங்கன்னு என்ன நிச்சயம்?"

"நானா நுழைஞ்சேன்"

"இல்லே... நான்தான் தூக்கி உக்கார வைச்சிக்கிட்டேன். பாரதியும் உங்களைப் பத்தி ரொம்பவே பேசியிருக்கா. எவ்வளவு அகலமான தோளு, எவ்வளவு நீளமான மூக்குன்னு சொல்லியிருக்கா. அவளுக்குக் கூட, இருக்கோ என்னமோ!"

"எம்மேலயா?"

"ஆமா. ரொம்ப வெறைச்சிக்காதீங்க. ஆம்பளை ஆசைப்படற மாதிரி, பொம்பளையும் ஆசைப்படுவா. ஆசைப்பட்டது கிடைக்க என்ன வேணும்னாலும் செய்வா. அது போகட்டும். உங்களை எத்தனைநாள் இங்கேயே வைச்சிப் பாக்கறது?"

"பின்னே என்ன பண்றது?"

"கல்யாணம்?"

"ஒரு வேலை ஆயிடட்டுமே சூர்யா"

"பெரிய வேலை. இப்பத்தான் தறில உக்கார்ரேன்னு சொல்றீங்களே. மார் வலிக்க, வலிக்க தறிக்கயித்தை இழுத்தாவுதே. இன்னும் என்ன வேலை?"



"எப்படிப் பேச்செடுக்கறது?"

"நீங்க ஆம்பளைதானே? நான் வேணும்தானே? உங்களுக்கு தைரியமா பொண்ணு வேணும்னு கேளுங்க"


"உடனே உங்கப்பா கட்டித் தந்திடுவாரு"

"கேக்காமலே இருந்தா மட்டும் கட்டிக் கொடுத்துடுவாரா? என்னது இது தண்ணி கிட்ட வரதுக்குப் பயப்பட கன்னுக்குட்டி மாதிரி"

அடுத்த நாள் அவன், சூர்யாவின் அப்பாவிடம் போய் பெண் கேட்டான். சூர்யாவின் அப்பாவின் முகம் எப்போதும் மாலை வெயிலில் நனைகிற மாதிரி ஒரு மினுக்கும் சிவப்போடு இருக்கும். அவன் பெண் கேட்டதும், அவர் முகம் மேலும் சிவந்தது. ஆடிக்கொண்டிருந்த ஊஞ்சல் நின்றது.

"கூலித்தறிக்காகப் பாவு கேட்க வந்திருப்பேன்னு நினைச்சா. நீ பொண்ணா கேக்கறே? யாரைப் பார்த்து என்ன பேச்சடா பேசுனே? டேய்... என்னடா பாத்துக்கிட்டு நிக்கறீங்க. அவன் கழுத்துல கையவைச்சித் தொரத்துங்கடா. வீட்டுக்குள்ள தெருநாய் வந்த மாதிரி... டேய்... என்ன தைரியன்டா உனக்கு. என்னைப் பார்த்து... என்னைப் பார்த்து..."

அவர் இன்னும் கோபத்தின் உச்சிக் கொம்பில் உட்கார்ந்து, உதறிக் கொண்டிருக்க, வீட்டு ஆட்கள் அவனை வெறுப்போடு அணுக, சுந்தர் அவமானம் தாங்காமல் வீட்டை விட்டு ஓடிவந்தான்.



## பருவகாலக் கனவுகள்! 8

ஒரு வாரம். அவன் வீட்டைவிட்டு வெளியே கிளம்பவில்லை. வீட்டில் இருந்த இரண்டு அண்ணன்களுக்கும் செய்தி தெரிந்துவிட்டது.

"என்னடா குறுக்கு வழியில முதலாளி ஆகப் பாக்கறியா?" என்று தொடங்கி ஏசினார்கள். அவன் ஆற்றங்கரைக்குப் போகவில்லை. உடற்பயிற்சிக் கூடத்துக்குப் போகவில்லை. தறிமேடையே கதியாக இருந்தான். வேலை... வேலை... வேலை... களைத்துப் போனால் உறக்கம். ஒவ்வொரு முறை பன்னையை அணைக்கும்போதும், அதை அடித்துக் கொல்வதாய் நினைத்தான். கண்டு இடதும் வலதுமாய் பாய்ந்தபோது, அதன் பாதையில் தன் மனம் இருக்கக் கூடாதா என்று எண்ணினான். கண்ணீர் பெருக்கெடுத்தது. வீட்டுக்கு கண்டில் நூல் சுற்றிக்கொண்டு வந்து தருகிற பெண்கள் எல்லாம் அவனைப் பார்த்து கிசுகிசுக்கிற மாதிரி இருந்தது. இரண்டு அண்ணிகளும் நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு குத்தூசியால் ஏதோ தவறவிடக்கூடாத சடங்கு போல் குத்திவிட்டுச் சென்றார்கள். அவன் நலிந்து போனான். வெளித் திண்ணையில் படுத்தால் வம்புவரும் என்று, பின்னால் போய், அண்ணிகள் விலக்கானால் உட்கார்ந்து கொள்கிற இடத்தில், வெயிலிலும், குளிரிலும் காய்ந்து விறைத்தான். இப்படியெல்லாம் உடலை வருத்தினால், உயிர் அதைத் தாங்க மாட்டாமல் அந்த உடலிலிருந்து பிரிந்துவிடும் என்று நப்பாசைகூட இருந்தது அவனுக்கு.

எட்டாம் நாள் அவன் கொல்லையில் இருந்தான். துக்கம் காப்பவன் போல் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தான். தோளில் கை விழுந்தது. நிமிர்ந்து பார்த்தான் ஆந்தை.

"சென்னைக்கு போயிருந்தேண்டா. கொள்முதலுக்கு. திரும்பிவந்தா கும்பகோணம் முழுக்க ஒரே பேச்சா இருக்கு. பொண்ணு கேட்டியாமே. பெரிய பேட்டையில..."

"ம்"



"உனக்கு ரொம்பத் தைரியண்டா மாப்ளே... பொண்ணு கேட்கறது ஒண்ணும் தப்பில்ல மாப்ளே... நீ என் இங்க வந்து பொட்டச்சி மாதிரி உக்காந்திருக்கே? வீட்ல பொண்ணு இருந்தா, ஆம்பளையா இருக்கிற எவனும் வந்து கேக்கத்தான் செய்வான் மாப்ளே. என்னவோ உன் தலையில இடி விழுந்த மாதிரி இருக்கியே. எழுந்து வா மாப்ளே. சென்னையில நான் என்னென்னயும் அனுபவிச்சிட்டு வந்திருக்கேன்! உன்னை ஒருதடவை இழுத்துக்கிட்டு போயிட்றேன். அப்புறந்தான உனக்கு அர்த்தம் தெரியும். இதுக்குப் போயா இவ்வளவு இடிஞ்சி போனோம்னு தெரிஞ்சிக்குவே. வெக்கப்படுவே. வா மாப்ளே" என்று அவன் தோளிடுக்கில் கைகொடுத்துத் தூக்கி விட்டான்.

"விசாரிச்சேன் மாப்ளே. உன் ஆளு பேரு சூர்யாவாமே..."

"ம்..."

"அதுகூட இன்னொரு கழுதை எப்பவுமே சுத்திக்கிட்டிருக்குமே"

"பாரதி"

"அப்படிப் போட்ரா மாப்ளே. அது எவ்வளவு அம்சமான பொண்ணு. அதுக்கு வலை வீசியிருந்தா சுளுவா சிக்கியிருக்குமே. நீயும் வேலையை முடிச்சிக்கிட்டு, தட்டி விட்டு வந்திருக்கலாமே. இந்தப் பொண்ணு கேக்கற தொல்லை அது இதுன்னு எதுவுமில்ல இல்ல"

"என்னடா சொல்றே?"

"அது பொட்டுக் கட்டுன குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணுடா. அப்பன் யாருன்னு தெரியாது. வரியா லாட்ஜுக்கு கூப்டாலும் வந்திருக்கும். அதுக்கு ஏதோ ஒரு பெரிய மனுஷன் பாதுகாப்பு இருக்குன்னு சொன்னாங்க. அடியாளுங்க எல்லாம் படை எடுத்து வந்துருவானுங்கன்னு பயமுறுத்துனாங்க. அதனாலத்தான் நான் தேட்டம் போடல. இல்லன்னா நான் என்னிக்கோ அது வீட்டுப்

படி எறியிருப்பேன்.

"ச்சீ, பொம்பளைங்கள பற்றிக் கண்டபடி பேசாதடா. உனக்கும் அம்மா, அக்கா, தங்கச்சி எல்லாம் இருக்காங்க இல்ல?"

"ஆமா. அறிவுரை சொல்ல வந்துட்டாரு. உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். அதுசரி, நீ எப்படிரா மாப்ளே அவளைப் புடிச்சே. பார்த்தா பூனை மாதிரி இருந்தே?"

"கோயில்ல"

"அடிசக்கை, நான் நுழையாத இடம். அதான் தெரியாமபோச்சி. நீயும் அமுக்குப் புள்ளையாரு மாதிரி சும்மா இருந்திட்டே சரி, வுடு... தாடி வளர்த்துக்காதே. அடுத்த வாரம் சென்னைக்குப் போறேன். மறுபடி, எங்கூட வா. உனக்கு எவ்வளவு சூர்யா வேணும் சொல்லு. கட்டி வைக்கறேன். அனுபவி. அப்புறம் சொல்லு உன் காதலோட கதியை"

இராமசாமி பேசப் பேச அவனுக்கு ஒரு வெறுப்பு படர்ந்தது. மவுனமாக இருந்தான்.

"இப்ப நான் சொல்றது வேப்பங்காயாத் தான் கசக்கும் மாப்ளே. கல்யாணம்னு ஒண்ணு ஆகட்டும். அப்புறம் உன் காதலை நினைச்சி நீயே சிரிப்பே பாரு! வா போகலாம்!"

வீட்டுக்குத் திரும்பியபோது வாசலில் கார் இருந்தது. அவன் புதிர் போன்ற முகத்துடன் உள்ளே பார்த்தான். ஒருவேளை அவன் பெண் கேட்டதால் அவனை தட்டிவிட்டுப் போக அடியாட்கள் வந்து காத்திருக் கிறார்களா?

"வாங்க மாப்பிள்ளை?" என்று வரவேற்புக் குரல் கேட்டது.

வரவேற்றது. சூர்யாவின் அப்பா. நெஞ்சு நிறைய சந்தோசம் முகத்திலும் தெரிந்தது.

"வாடா மாப்ளே" என்று அண்ணன்களும் சிரித்து வரவேற்றார்கள்.

என்ன இது?

தூக்குமேடை நோக்கி நடக்கும் கைதி



போல் தன்னை உணர்ந்தான் அவன்.



## பருவகாலக் கனவுகள்! 9

சூர்யா சாதித்துவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் சூர்யாவைப் பெற்றவரே வீடு தேடி வந்து பெண் கொடுப்பதாகச் சொல்வதாவது?

சின்ன அண்ணனும், நடு அண்ணனும் பாயை விரித்து இருப்பதிலேயே வெள்ளையான முழுக்கைச் சட்டை அணிந்து உட்கார்ந்திருந்தார்கள். பெண் கொடுக்க வந்திருப்பவர் குடிக்க என்று யாரோ ஒரு சிறுவனை ஏவி மூன்று நான்கு 'காளிமார்க்' கிரஷ் கொண்டுவந்து மூடி திறந்து வைத்திருந்தார்கள். கண்ணாமூச்சி ஆடும் பையன்களில் மூன்றுபேர் முற்றத்திற்கும் நடைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் நின்று காளிமார்க்கையும், கார் முதலாளியையும் அகலக் கண்களுடன் அகன்ற வாய்களுடனும் பார்த்தார்கள். மிச்சமாகும் காளிமார்க்கைப் பங்கு போடுவதில் நிச்சயம் ஒரு கைகலப்பு வரத்தான் போகிறது. சூரியாவின் அப்பா மிக மென்மையாகப் பேசினார்.

"அன்னிக்கு ஏதோ ஞாபகத்தில மாப்பிள்ளைகிட்ட கொஞ்சம் வேகமாகப் பேசிட்டேன். மாப்பிள்ளை எதையும் மனசில வைச்சிக்கக்கூடாது" வாக்கியத்திற்கு வாக்கியம் மாப்பிள்ளை.

"அவன் சின்னப் பையன். அதெல்லாம் ஒண்ணும் பாராட்டமாட்டான். அவனுக்கு வசவு ஒண்ணும் புதுசில்லையே. நாங்க தினம் தினம் அவனுக்குப் பொறுப்பு வரணுங்கறதுக்காகப் பேசறதுதான். அவன் எல்லா வசவையும் துடைச்சி விட்டுப் போய்டுவான். கடப்பாரையை முழுங்கி ஏப்பம் விட்ருவான்"

"இருக்கட்டும். சொல்ல வேண்டியது என்

கடமை! சொல்லிட்டேன். முகூர்த்தத்துக்கு நாள் குறிச்சிட்டு வந்திருக்கேன். உங்களுக்கு சவுரியப்பட்ட தேதியைச் சொல்லியனுப்புங்க. கல்யாணத்தை நடத்திடலாம்"

அவர் எழுந்துகொண்டார்.

"வரேன் மாப்பிள்ளை" என்று அவன் முகத்திற்கு நேராய் சொல்லிவிட்டுப் போனார் அவர். இங்கே பையன்கள் பாய் நோக்கிப் பாய்ந்தார்கள்.

சுந்தருக்குக் கொஞ்ச நேரம் மகிழ்வாய்த் தான் இருந்தது. விசயம் எல்லாம் வெளிப்பட்டதும் அவனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. அண்ணன்கள் இருவருக்கும் அவர் இரண்டு இரண்டு சொந்தத் தறிகள் போட்டுத் தருவதாகச் சொல்லியிருந்தார். அதுதான் அண்ணன்கள் இருவரும் சேர்ந்து அவனை விற்றுவிட்டார்கள். சுந்தர் கல்யாணத்திற்குப் பின் மாமனார் வீட்டோடு போய் இருந்துவிட வேண்டியது. அவருக்குப் பையன்கள் இல்லை. ஒரே பெண். அதனால் வியாபாரத்தை அவன் கவனித்துக் கொள்ள வேண்டியது. அவன் கவுரவம், சுயமரியாதை, தன்மானம் எல்லாவற்றையும் கொண்டு போய் மாமனார் வீட்டில் அடகு வைத்துவிட்டு, அவர்கள் வீட்டு கணக்குப்பிள்ளையாக மாறிவிடுவது என்கிற ஏற்பாடு அவனுக்குப் பிடிக்கவே இல்லை. ஆனால் அண்ணன்கள் இருவரும் சேர்ந்து அவனை மூட்டை கட்டித் தூக்கிப் போய் பெரிய பேட்டை வீட்டில் இறக்கி வைத்துவிட்டு வந்துவிடுவார்கள் போலிருந்தது. அடுத்த நாளுக்கு அடுத்த நாள் சூர்யா வீட்டிலிருந்து ஒரு வேலைக்காரன் வந்து ஒரு துண்டுச் சீட்டுக் கொடுத்தான். கோயிலுக்கு வரச் சொல்லி சூரியா எழுதியிருந்தாள். சூரியாவின் எழுத்துக்களைப் பார்த்தவுடன் அவன் உருகிப் போனான்.

கோயிலுக்குப் போனவனை சூரியா ஆட்கொண்டுவிட்டாள். அதே கல்தேரின் விலாப்புறத்தில் வைத்து உரிமையுடன் அவன்



கரம்பற்றி ஒரு முத்தம் கொடுத்தாள். சுந்தர் தன் கோபத்தைக் காற்றில் பறக்கவிட்டான். அவனைக் கேவலப்படுத்துவதற்காக ஒன்றும் வீட்டு மாப்பிள்ளையாக அவனை வரச்சொல்லவில்லை என்று சத்தியம் பண்ணினாள். நிஜமாகவே அவளுக்கு அண்ணன் தம்பி என்று யாரும் இல்லை. பங்காளிப் பையன்களை தத்து எடுத்துக் கொள்வதிலோ, அவர்களிடம் வியாபாரப் பொறுப்பைக் கொடுப்பதிலோ அவளுடைய அப்பாவிற்கு விருப்பம் இல்லை. எனவே தான் மாப்பிள்ளையையே வியாபாரத்தைக் கவனிக்கச் சொல்வது என்ற முடிவு. சூரியா தான் அந்த முடிவை அவரிடம் உரைத்தாள் என்று சொன்னாள். அவன் எல்லாவற்றுக்கும் தலையாட்டினான். சூரியா கையில் மந்திரக்கோல் வைத்திருந்தாள். அவள் கோலை ஆட்டின திசையில் எல்லாம் அவன் ஆடினான். கல்யாணத்திற்காக என்று அவனுக்குப் பண்ணியிருந்த தங்கத் தோடாவையும், மோதிரத்தையும், செயினையும் காட்டினாள். அவனுக்கு பிரமிப்பாய் இருந்தது. பெருமையாய் இருந்தது. கூடவே வருத்தமாயும் இருந்தது.

"நான் ஒரு பொம்பளை"

"அதனால"

"நானே கல்யாணத்துக்கு முன்னால் உங்க கையைப் புடிச்சி முத்தமெல்லாம் கொடுக்கறேன்! அந்தத் தைரியம் அங்க இல்லியே"

"இது கோயில் இல்லையா. அதான் யோசனையா இருக்கு"

"சாமி பார்த்துடுமேன்னா?"

"இல்ல. கோயிலுக்கு வர்றவங்க பார்த்துடுவாங்களேன்னு"

"உங்களுக்கு சந்தோசந்தானே?"

"ஆமா சூரியா. திகட்டத் திகட்ட! ஆனா நானா ஒரு வேலை தேடிக்கிட்டு"

"கும்பகோணத்துல வேற யாராவது ஒரு முதலாளி இந்த மாதிரி வேலையைக்

கொடுத்திருந்தா செய்வீங்களா இல்லியா?"

"உம்"

"அப்படி எடுத்துக்கக்கூடாதா? உங்களுக்குத் தறி நெய்ஞ்சாத்தான் சரிப்பட்டு வரும்னு தோணிச்சின்னா வீட்லயே தறியிருக்கு. அதிலயும் உட்காரலாம். அந்த வேலை செய்ஞ்சா என்ன கூலி வருமோ, என்ன சம்பளம் வருமோ அதை நாம எடுத்துக்குவோம். அதிலயே நாம சமைச்சி சாப்புடுவோம். என்ன சொல்றீங்க?"

"உம்"

"சும்மா சொன்னா பாத்தாது"

"..............."

"அப்...பா எலும்பு உடைஞ்சிடும் போல இருக்கு"

கும்பகோணத்திலேயே பெரிய கல்யாண மண்டபம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கல்யாணம் ரொம்ப அமர்க்களமாக நடந்தது. நாதசுரக் கச்சேரி, பாண்டுவாத்தியம், எல்லாம் ஒலிக்க சுந்தர் குதிரை மேல் போனான். சுந்தருடைய மாமனார் விவரமானவர். சின்ன அண்ணன்கள் இருவருக்கும் இரண்டிரண்டு தறி கொடுத்தது போல், பெரிய அண்ணனையும் வளைத்துவிட்டார். பெரிய அண்ணி எல்லாருக்கும் முன்னால் நின்றாள். சின்ன அண்ணனும் நடு அண்ணனும் சுந்தரிடம் முறைத்துக் கொண்டால், பிழைப்பில் மண் விழுந்துவிடும் என்ற ஐயத்தில் மஞ்சள் சட்டையும், நறுக்கிவிடப்பட்ட மீசையும், தோளில் துண்டும் போட்டுக்கொண்டு கல்யாணத்தில் பங்கு பெற்றார்கள். ஆந்தை இராமசாமி, மாது, ரெயில் சிநேகிதர்கள் எல்லாம் ஒரு பெருமையும், சிறு பொறாமையும் கலந்து கல்யாணம் காண வந்தார்கள். அவளைத்தான் காணவில்லை. சூரியாவின் எத்தனையோ சிநேகிதிகள் சூரியா அறிமுகப்படுத்தினாள்.

பாரதி வரவில்லை. ஏன் வரவில்லை? மனையில் இருக்கும்போது கேட்டால் சூரியா



கோபிப்பாளோ? அவ்வளவு நெருங்கிய தோழி! சூரியா அவனோடு பேச வாய்ப்பு அமைத்துக் கொடுத்தவள்! மயங்கிச் சரிந்தவனுக்கு சிகிச்சை, தோசை, சர்க்கரை என்று பணிவிடை செய்தவள். அவளும் இருந்திருந்தால் மண்டபத்தின் அழகு பல்கிப் பெருகியிருக்கும் என்று தோன்றியது. பாரதி இல்லை. அதனால் கல்யாண வீட்டின் ஒளிர்வில் ஒரு மாற்று கம்மிதான். ஒரு வேளை ஆந்தை சொன்னது உண்மை தானா? அவள் பொட்டுக் கட்டினவள் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதால்தான் வரவில்லையா?

புகை கண்ணை எரிச்சல் கொள்ள வைத்தது. நாசியை எல்லாம் அடைத்தது. ஒருபக்கம் சினிமாப் பாட்டு அலறியது. நாதசுரக்காரர்கள் விதவிதமாய் ரீவாளிகளைப் பரிசோதித்து கட்டிடத்தைக் காற்றாலேயே ஓட்டையிடுகிற மாதிரி வாசித்தார்கள். தவில்காரர்களும் கட்டிடத்தை இடித்துதள்ளும் நோக்கில்தான் வாசித்தார்கள்.

சுந்தர் சூரியாவின் கழுத்தில் தாலி கட்டினான்.

"பாரதி ஏன் வரல்லே" என்று முதலிரவில் கேட்டான்.

சூரியாவிற்கு முகம் சிறுத்துப்போனது.

"வரமாட்டேன்னு சொல்லிட்டா"

"ஏன்? நீங்க ரெண்டு பேரும் ரொம்ப நெருக்கந்தானே?"

அவள் பேச்சு எதுக்கு இப்ப? நான்தான் இருக்கேன்ல. நான் இருக்கும்போது உங்களுக்கு ஏன் அவள் நினைப்பு வருது"

"இல்ல. அவள்தானே நீ எங்கூட பேச வழி சொல்லிக் கொடுத்தான்னு சொன்னே"

"ஆமா. அவளை அப்ப நம்புனேன். சொன்னேன். நீங்க மயங்கி விழுந்ததுக்கு அப்புறமா உங்களைக் கூட்டிப்போய் அவள் வீட்ல படுக்க விட்டோமா. பரவசப்பட்டுட்டா போல இருக்கு. நீங்க ரொம்ப அழகுன்னு சொன்னா. நல்ல உடல்கட்

டுன்னு சொன்னா. அவளுக்கு உங்க மேல ஒரு கண்ணோ என்னவோ. நான் கல்யாணத்துக்கு கூப்பிட்டேன். வரேன்னுதான் சொல்லணும். முழுமனசோட கூப்பிடறியா? இல்ல, பழகிட்டோமே, கூப்பிடணும்மேன்னு கூப்பிடறியான்னு கேட்டா. வர்றதானா வா, இல்லன்னா போன்னு சொல்லிட்டேன். நீங்க சட்டை எல்லாம் போடாம மனைல உக்காருவீங்கன்னு தெரியும். எனக்குப் பயமா இருந்தது"

"என்ன பயம்?"

"என்னவோ பயம்? நீங்க எனக்கே எனக்குன்னு இருப்பீங்க இல்லே"

"இதென்னம்மா கேள்வி. அதுவும் முதல் இராத்திரி அன்னைக்கே?"

"எனக்கு துரோகம் பண்ணமாட்டேன்னு சத்தியம் பண்ணுங்க"

சுந்தர் அவளை அணைத்து முத்தமிட்டான். அந்தக் கிறக்கத்தில் அவள் ஆழ்ந்து போனாள். அப்புறம் பேச்சு இல்லை. செயல்தான்.

ஒரு வினாடி பூகம்பம், எல்லாவற்றையும் புரட்டிப் போடுகிற மாதிரி சுந்தரின் வாழ்க்கை முறையே மாறிப் போய்விட்டது. ஒரு சுடு சொல் இல்லை, அவன் வார்த்தை ஒவ்வொன்றும் அந்த வீட்டில் சொக்கத் தங்கமாய் மதிக்கப்பட்டது. சுந்தருக்கு வியாபாரம் வெகு இயல்பாக வந்தது. தறிக்காரர்களிடம் பட்டுநூல் எடை போட்டுக் கொடுப்பதில் எவ்வளவு கெடுபிடியாய் நடந்துகொள்ள வேண்டுமோ நடந்து கொண்டான். எங்கே விட்டுக் கொடுக்க வேண்டுமோ விட்டுக் கொடுத்தான். சின்ன அண்ணன்கூட பாவுநூல் வாங்க வந்தவன், அவனிடம் எட்டி நின்று பேசினான். பயந்து பயந்து வார்த்தைகள் உதித்தான். ஏறு மாறாக ஒரு சொல் வந்தாலும், அவனுக்கு வழங்கப்பட்ட மானியம் பறிபோய்விடுமோ என்ற பயம் அவனுக்கு இருக்கலாம்.



அன்றைக்கு காலை சாப்பாடு எல்லாம் ஆனதும். மாமனார் வெளியில் போக வில்லை. சங்கத்தின் கட்டிடத்திற்கு அவனையும் அழைத்துப்போகப் போவதாகச் சொல்லிவிட்டார். அவன் முதன்முதலாய் பெரிய மனிதர்களுடன் போய் சபையில் பேசப் போகிறான் என்று சூரியாவிற்கு ஒரே பெருமை.

வாசல் வரை வந்து காரில் ஏற்றி கதவை அறைந்து சார்த்தி, கையசைத்து விடை கொடுத்தாள். காரை மாமனார்தான் ஓட்டினார். அவன் முன்னால் பக்கத்தில் அமர்ந்திருந்தான். கார் போன திசையைக் கவனித்தான். அவன் நடந்து நடந்து வலித்த பாதைகள் ஏங்கி ஓங்கி வெதும்பிய இடங்கள், கும்பகோணத்தில் எந்த இடமும் அதனதன் நிலையில் இருந்து பிறழாமல் இருந்தது. அவன் நிலைதான் மாறிவிட்டது. நடப்பது மறந்துவிட்டது. சூரியாவைக் கரம்பிடித்த ஆறு மாதங்கள் ஆனதை அவனால் நம்ப முடியவில்லை. அவள் இப்போது ஐந்து மாத சூலைத்தாங்குபவள் எனபதையும் அவனால் நம்ப முடியவில்லை. விநாடிக்கு விநாடி வாழ்க்கை விரைகிறது. விரையும் போதே அதன் சுவடுகளைப் பதிக்கிறது. அது இன்பமோ, துன்பமோ.

கார் நின்றது.

"நீங்கள் உள்ளே போங்கள் மாப்பிள்ளை. நான் அப்புறம் வந்து உங்களைக் கூட்டிப் போகிறேன்" என்று மாமனார் அவனுக்காக கார் கதவைத் திறந்து வைத்திருந்தார். பதறிப்போய் இறங்கினான். அவன் எதுவும் பேசுவதற்குள் மாமனார் கதவைச் சார்த்திக் காரிலேறி விரைந்து விட்டார். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"வாங்க" என்று குரல் கேட்டது. அவன் நரம்புகளில் சில மீட்கப்பட்டன. பழக்கப்பட்ட பரிவான குரல், திரும்பினான்.

பாரதி நின்றிருந்தாள்.

அதே பாரதி. அகன்ற முகம், விரிந்த கூந்தல், முத்துச்சிப்பி கண்கள், கோடுகள் கொண்ட உதடுகள், முகத்தில் ஒரு நிரந்தர ஏக்கம்.

சுந்தர் திகைத்துப் போனான். இது என்ன அமளி? உற்பத்தியாளர் சங்கம் என்று சொல்லிவிட்டு மாமனார் இங்கே கொண்டு வந்து நிறுத்தக் காரணம் என்ன?

"எல்லாம் உள்ளே வந்து பேசிக்கலாம், வாங்க"

அவன் துந்துபி மந்திரவாதியின் முழக்கத்திற்கு கட்டுப்பட்டவன் போல் உள்ளே சென்றான்.

அதே கட்டில் அறை, பிரமிப்பு மாறாமல் உட்கார்ந்தான்.

"எதுவும் நம்ப முடியலே இல்லே?" என்று சுவரில் தளர்ந்து சாய்ந்து பாரதி கேட்டாள். அவள் நின்ற நிலை கவர்ச்சியாக இருந்தது. ஆளை வசப்படுத்தும் சக்தி இருந்தது அதற்கு.

"அப்படின்னா?"

"முதல் தடவையும், எனக்கு கனவா, இல்ல நனவான்னு தோணிச்சி. இப்பவும்"

அவள் சிரித்தாள். ஆந்தை இராமசாமி பொட்டுக் கட்டினவள் என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. இது உண்மையா? பொய்யா? இத்தனை நாள் வனவாசம் போல் மறைந்திருந்தவள் திடீரென, பெண் சிறுத்தை போல் எதிர்ப்பட என்ன காரணம்?

"நான் பேசினதுக்கு அப்புறம் புரிஞ்சிடும்"

"என்னன்னு?"

"கனவா, நனவான்னு"

"என்ன பேசப்போறீங்க? ஏன் கல்யாணத்துக்கு வரவில்லை?"

"என்னை வாங்க, போங்கன்னு சொல்லாதீங்க. என்னவோ எவி தலையில் கிரீடம் வச்சா மாதிரி இருக்கு"

"ஏன் கல்யாணத்துக்கு வரவில்லை பாரதி"

அவன் பாரதி என்று அழைத்தது கேட்டு அவள் ஓர் இன்ப முகம் காட்டினாள். ஒரு கணத்தில் முகம் மாறி சோகக்குறி காட்டியது. அறிவிப்பின்றி பெய்யும் கோடை மழை போல அவள் கண்களில் நீர் திரண்டு இறங்கியது.

"என் தலையெழுத்து ரொம்பக் கோணலா இருக்கு சுந்தர்"

அவர் பெயர் சொன்னபோது கிளர்ச்சியாயிருந்தது. சூரியா இதுவரை பெயர் சொன்னதே இல்லை. ஓரிருமுறை அவன் வற்புறுத்தியும் அவள் மறுத்துவிட்டாள். அடேடே... என்ன இது? எதற்காக சூரியாவையும் பாரதியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்?

"எனக்குப் புரியலை"

"எப்படிப் புரியும்? நான் சொன்னாத் தானே தெரியும்?"

உரையாடல் அர்த்தமற்றதாகத் தோன்றியது. அதுகூட இல்லை. அவள் ஏதோ சொல்ல வந்து தயங்குகிறாள்! அதுதான் இந்த சுற்றிவளைப்பு. தோசையின் ஓரத்து கிள்ளல் எல்லாமே. அவள் பேசுவாள் என்று அவளையே பார்த்தான். பார்க்கப் பார்க்க அந்த முகம் அவனை அப்படியே விழுங்கி விடும் போல் ஓர் உணர்வு உண்டானது.

"என்ன சொல்லணுமோ சொல்லு பாரதி" என்றான்.

"நான் யாருன்னு தெரியுமா உங்களுக்கு?"

"பாரதி"

"அது ஒரு பேரு. அவ்வளவுதானே? நான் உங்க மாமனாரோட பொண்ணு"

"என்னது?" அவள் நின்றவாக்கில் ஒரு பாறாங்கல்லை எறிந்த மாதிரி பட்டது அவனுக்கு.

"உக்காருங்க சுந்தர். ரொம்ப நாள் இரகசியம் அது. உங்ககிட்ட ஒடையுது. சூரியாவோடு அம்மாவுக்கு அப்புறம், உங்க மாமனாருக்கு எங்கம்மாகூட பழக்கம். பொட்டுக் கட்டின குடும்பத்துக்காரிதான் அம்மா. அவள் வயிற்றில் நான் பொறந்தேன். அதுக்குக் காரணம் உங்க மாமனார்"

எங்கேயோ மேலிருந்து படபடவென துப்பாக்கிச் சுடுகிற மாதிரி பாரதி வார்த்தைகளை உமிழ்ந்தாள்.

"சூரியா உங்கமேல ஆசைப்படறதுக்கு முன்னால நான்தான் உங்க மேலே ஆசைப்பட்டேன். உங்களுக்கு பொண்டாட்டியாகணும்னு ஏங்கினேன். ஆனால் நான் யார் மேலேயும் ஆசைப்பட முடியாது. ஆசைப்படறதா சொன்னாக்கூட குற்றம். எனக்குன்னு ஒரு வாழ்க்கை கிடையாது. இது எவ்வளவு அக்கிரமம் பார்த்தீங்களா சுந்தர்?"

"..............."

"எங்கம்மா உங்க மாமனாருக்கு வாழ்க்கைப்பட்டாங்க. அதனால வெளியில எங்கேயும் போகல. இந்த நாலு சுவற்றுக்குள்ளேயே இருந்துட்டாங்க. இன்னாருக்குப் பொண்டாட்டின்னு சொல்லிக்க முடியாது. ஆனால் ஒருத்தருக்கேப் பொண்டாட்டியா வாழ்ந்துட்டாங்க. நானும் அந்த மாதிரிதான். ஊருக்குள்ள இன்னார் பொண்டாட்டின்னு சொல்லிக்க முடியாது. யாரும் அவ்வளவு தைரியமா என்னைக் கட்டிக்க மாட்டாங்க. அப்படியே கட்டிக்கிட்டாலும் நாளைக்கு ஆம்பளைங்களோடு மனசு மாறிடும். இவளைப் போய்க் கட்டிக்கிட்டோமேன்னு தோண ஆரம்பிக்கும். நானும் பொண்ணு தானே சுந்தர்? எனக்கும் பருவ காலத்தில் எல்லாக் கனவும் இருக்குந்தானே?"

"அதுக்கு... அதுக்கு... நான்... நான்..."

"நான் ஆசைப்பட்டதை அடையறதுக்கு எனக்கு உரிமை இருக்கு இல்லியா?"

"நீ என்ன ஆசைப்படறேங்கறதைப் பொறுத்தது பாரதி"



"கரும்புத் திங்க யாருக்காவது கூலி வேணுமா சுந்தர்"

"என்னால சூரியாவுக்கு துரோகம் பண்ண முடியாது"

"இதென்ன பெரிய வார்த்தை எல்லாம் பேசிக்கிட்டு. நான் ஒண்ணும் துரோகம் பண்ணச் சொல்லலியே. இன்னும் சொல்லப் போனா... என்னாலேயும் தான் நீங்க சூரியாவுக்கு தாலி கட்டினது. நான் சொன்னதாலத்தான் உங்க மாமனார் உங்களை மாப்பிள்ளையா ஏத்துக்க ஒத்துக்கிட்டாரு. காசு, அந்தஸ்து எல்லாம் இன்னிக்கு இருக்கும், நாளைக்குப் போகும். நாளைக்கே உங்க வியாபாரத்தில் நஷ்டம் வந்து நீங்க மஞ்ச நோட்டீசு கொடுத்திட்டீங்கன்னா உங்க காசும் அந்தஸ்தும் என்ன ஆகும்னு கேட்டேன். இத்தனை நாள் அவர் கவுரவம் போயிடக் கூடாதுன்னு நானும், அம்மாவும் வெளியே சொல்லாம இருக்கறதுக்கு இதுதான் நீங்க காட்டுற நன்றியான்னு கேட்டேன். அவரு யோசிக்கத் தெரிஞ்சவரு. நல்லது கெட்டது யோசிச்சித்தான் ஒத்துகிட்டாரு. அதனால சூரியாவுக்குத்தான் எல்லாமே நடந்திருக்கு மொதல்ல. அஞ்சி மாசமாமே. கேக்கறப்ப சந்தோஷமா இருந்திச்சி. நான் கல்யாணத்துக்கு வந்து நின்னா நாலுபேர் நாலு விதமாப் பேசுவாங்களேன்னுதான் நான் வரல்லே. அவள் கோவிச்சிக்கிறா மாதிரி ஒரு சின்ன நாடகம் ஆடினேன். அவளுக்கும் இப்படி அப்படி விசயம் தெரிஞ்சிருந்தா. நாளைக்கு எப்பவோ ஒரு சமயம் அது தெரியறப்ப அப்படி ஒண்ணும் பெரிய அதிர்ச்சியா ஆயிடக் கூடாதுன்னுதான்"

"அப்ப நான் வெறும் விளையாட்டுப் பொம்மையா பாரதி?"

"அப்படி ஏன் நெனைக்கறீங்க? பெரிய ராஜான்னு வைச்சிக்கங்களேன். அதனால தான் உங்க மேல பொண்ணுங்க ஆசைப்பட்டு மேலே வந்து விழறாங்கன்னு

நெனைச்சிங்கங்களேன்"
"யானை மாலை போட்டதால ராஜாவான வன் நானு"
"அதெல்லாம் இல்ல. உங்க மனசு இப்பத் தத்தளிக்குது. ஆம்பிளைங்கள்ல யாருக்குத்தான் இந்த ஆசையில்ல? கட்டுனவ எப்படியும் அலுத்துத்தான் போவா. ஆம்பளை கண்ணுவேற பக்கம் பாக்கத்தான் பாக்கும். நாம சொல்லிடறதால குத்திக் காட்டுற மாதிரி ஆயிடுது. நீங்க அப்பத்தான் ராமன், ராமகிருஷ்ணன்னு பேச ஆரம்பிக்கிறீங்க. எனக்கு என்ன தாலி வேணும்னு சொன்னேனா? பிள்ளை வரம் வேணும்னு சொன்னேனா? உங்களால முடியாததை எதாவது கேட்டேனா?"
"என் மனசு இப்ப ஒத்துக்கலை! நான் உன்னைத் தொட்டா அது சூர்யாவுக்கு நான் பண்ற துரோகம் மாதிரிதான் தோணுது"
"சரி ஒத்துக்கறப்ப வாங்க. இப்ப சாப்புடுங்க"
"வேணாம்"
"உங்க மாமனார் மத்தியானத்துக்கு மேலதான் வருவாரு. நான்தான் கூடாது. எங்க வீட்டுச் சாப்பாடு. உங்க வீட்டுச் சாப்பாடு மாதிரிதான். இதுகூடவா கூடாது?"
அவன் சாப்பிட வேண்டியதாகிப் போனது. சாப்பிட்டான். அவள் வளையல் சிணுங்கப் பரிமாறும்போது சூரியா ஞாபகம்தான் வந்தது. அவள் அம்மா எதிரில் படவில்லை. தன் பெண்ணுக்கு ஒரு சாதாரண வாழ்க்கை அமைத்துக் கொடுக்க முடியாத தனக்கு, அவள் முன் வர அருகதை இல்லை என்று எண்ணிவிட்டாளோ என்னவோ! சூர்யாவின் கையைப் பிடித்து அவளுடைய சிணுங்கும் வளையல்களை சிணுங்காமல் பண்ணுவது அவன் வழக்கம். இப்போதும் கை துடித்தது. அடக்கிக் கொண்டான். கட்டிலில் போய்ப் படுத்தான். அவன் எவ்வளவோ மறுத்தும் அவள் வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுத்தாள். பனை ஓலை விசிறியால்



விசிறிவிட்டு அவனை மிகவும் சின்ன மனிதனாய் உணரச் செய்தான்.
பிற்பகலில் காரில் மாமனார் பக்கத்தில் உட்கார்ந்தபோது ஸ்கூட்டர் ஒன்று காரைக் கடந்தது. ஸ்கூட்டர் மேல் இருந்தவன் ஆந்தை இராமசாமி போல் தெரிந்தது. அது முக்கியமாகப் படவில்லை. மாமனாரின் நிலைதான் தர்மசங்கடமாய்ப் பட்டது. எவ்வளவு தூரம் மனதைக் கல்லாக்கி இருப்பார் அவர். "முடியாதுன்னு சொல்லிட்டேன்" என்றான் அவன். அவர் ஒரு கனைப்பு மட்டுமே வெளிப்படுத்தினார். காரைச் செலுத்தினார்.



## பருவகாலக் கனவுகள்! 11

அது ஆந்தை இராமசாமிதான் என்பது வெகு விரைவில் சூர்யா மூலமே தெரிந்துவிட்டது. ஆந்தைக்கு பாதி மேல் என்ன கோபமோ! இல்லை சுந்தருக்கு வாய்த்த திடீர் யோகத்தால் அவனுக்குப் பொறாமையோ என்னவோ! நேற்று வரை அவன் தயவில்தான் பெரும்பாலும் ஓட்டலில் சாப்பாடு நடந்தது. அந்த நிலை திடீரெனப் பரிசல் கவிழ்த்துப் போடப்பட்டு வண்டியில் ஏற்றப்பட்ட மாதிரியான நிலை. ஆந்தைக்கு படியளக்கும் நிலை சுந்தரை வந்துச் சார்ந்ததை அவனால் பொறுக்க முடியவில்லையோ என்னவோ, சூர்யாவிடம் சொல்லிவிட்டான்.
பெரிய அண்ணி, அண்ணனுடன் வலிய வந்து சூர்யாவைக் கொண்டுபோய் வைத்து அவளுக்குப் பிடித்ததைப் பண்ணிப் போடுகிறேன் என்று இழுத்துப் போனாள். இது எதற்கும் பின்னால் உதவும் என்று அவள் நினைத்திருக்கலாம். அந்த வீட்டுக்குப் போய் சூர்யாவின் மனசில் நச்சுச் செடியை விதைத்துவிட்டு வந்தான் ஆந்தை இராமசாமி.

சூர்யா வண்டி கட்டிக்கொண்டு வந்துவிட்டாள். அவனுடன் சண்டை போட்ட சூரியா கணவனை வாயில் வராத வார்த்தைகளில் திட்டினாள். பாரதி வீட்டு வாசலில் அவனை ஆந்தை பார்த்தது உண்மைதான் என்று உணர்ந்துகொண்ட பின்தான் களத்தில் அவள் இறங்கினாள். மாமனாரிடம் ஒரு வார்த்தை சொன்னால், அவனை அவர் தெருவில் வீசிவிடுவார் என்றாள். சுந்தர் மாமனாரைக் காட்டிக் கொடுக்கவில்லை.

இது மட்டும் போதாதென்று பாரதி வீட்டுவரை சென்று அவளையும் ஏறிவிட்டு வந்தாள். பிள்ளை பெறுகிற வரை சூர்யா வீட்டை நரகமாக்கிவிட்டாள். அவளையும் தொடவிடவில்லை. சுந்தரின் உடலை புழுத்துப்போன உடல் என்றாள். அவன் அவளுடைய கணவன் என்பதெல்லாம் மறந்து போய்விட்டது. இத்தனை அவமானத்திற்குப் பாரதியுடன் மகிழ்ச்சியாவது இருந்திருக்கலாமே என்று அவனுக்குத் தோன்றியது. சூர்யா திட்டத் திட்ட அவனுக்கு பாரதி மேல் மதிப்பு பெருகிறது. சூர்யாவின் தாயும் இப்படித்தானே, என்னவோ பெண்கள் கல்யாணத்திற்கு முன் தேவதைகளாகவும், கல்யாணத்திற்கு பின் அரக்கிகளாகவும் மாறிப்போகும் மாயத்தை அவனால் செரிக்க முடியவில்லை.

மாமனாருக்கு விஷயம் தெரியாதிருக்காது. ஆனால் தேள் கொட்டின திருடன் நிலை. மவுனம் சாதித்தார். அவளுக்கு வலி எடுத்ததும் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். சுந்தர் ஆஸ்பத்திரிக்குகூட வரக்கூடாது என்றாள் அவள். சூரியாவிற்குப் பையன் பிறந்தான். நல்ல சிவப்பு, பிறந்தவுடன் மாமனார் குழந்தைக்கு தங்கச் சங்கிலியும், காப்பும், மோதிரமும் அணிவித்தார். அவனை ஆஸ்பத்திரி அறைக்குள் கூட அனுமதிக்கக் கூடாதெனச் சொன்னதாக செவிலி வந்து சுந்தரிடம் இரகசியமாகச் சொன்னாள். இரகசியம் காத்ததற்காக பத்து ரூபாய்



வாங்கிப் போனாள்.

சுந்தருக்கு அவமானமாய் இருந்தது. அன்றைக்கு இரவு ஆற்றுப் பாலத்தின் மேல் போய் உட்கார்ந்து சிகரெட் புகைத்தான். நள்ளிரவுதான் வீடு திரும்பினான். மறுநாள் எழுந்திருக்கும்போது இரு கண்களிலும் கொள்ளிக் கட்டையை வைத்துத் தேய்த்த மாதிரி இருந்தது. சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்திருந்தான். மாமனார் வந்தார். எழுந்துகொண்டான்.

"இன்னிக்கு சங்கத்துக்குப் போகணும். தயாரா இருங்க" என்றார் மாமனார்.

"எந்த சங்கத்திற்கு?"

மாமனார் சிரித்துவிட்டுப் போய்விட்டார். சட்டை அணிந்து திரும்பி வந்தார்.

"வாங்க" என்றாள் பாரதி.

சுந்தருக்கு அழுகையாய் வந்தது.

"இதுக்குத்தான ஆசைப்பட்டியா பாரதி? சூரியா விலகிப் போயட்டா"

"எனக்குத் தெரியும். அவளுக்கு என்ன அவ்வளவு கோபம்? எல்லாம் மாமனார் சொன்னார்"

"கோபம் வராதா?"

"உண்மை தெரிஞ்சா என்ன ஆகும்னு தெரியலை. என்னாலதான் அவளுக்கு இந்த வாழ்வுன்னு புரியலை. அவளுக்கு என்ன நஷ்டம்? நான் துரோகம் பண்ணிடுவேனா? உங்களைக் கைக்குள்ளப் போட்டுக்குவேனா? இந்த ஜென்மத்தில் எனக்கு அப்படில்லாம் கொடுத்து வைச்சிருக்கா? உம்.." என்று பாரதி அழத் தொடங்கினாள். அவள் விரிந்த கூந்தல், முத்துச்சிப்பிக் கண்கள், சுண்டியிழுக்கும் உதடுகள் என்று பார்த்திருந்தவனுக்கு அவள் அழுகை பயத்தைக் கொடுத்தது. மனதைப் பிசைந்தது.

"பாரதி, அழாதே" என்றான். அவள் கேட்கவில்லை.

அவளை நெருங்கி அவள் கன்னம் தொட்டான். அவன் கரம் நடுங்கியது. அவள் அந்

தக் கரத்தைப் பற்றிக்கொண்டாள். அவள் உடல் சூடாய் இருந்தது. கன்னம் கொதித்தது.

"உடம்பு சரியில்லையா பாரதி?" என்று அவளை நெருங்கி அவள் நெஞ்சில் கை வைத்தான்.

குப்பென்று நெருப்புப் பற்றிக் கொண்டது.

"இதுக்குத்தான் ஆசைப்பட்டேன். இதுக்குத்தான் அல்லாடினேன். எனக்குப் போதும். போதுங்க" என்றாள் பாரதி.

சுந்தருக்குத் தாங்கவொணாத குற்ற உணர்வாய் இருந்தது. கடைசியில் பெண்மை அவன் ஆண்மையை அடிபணிய வைத்துவிட்டது. சபலத்திற்கு அடிமை என்பதை நிரூபித்துவிட்டான். இத்தனை நாள் அடங்கிகிடந்த ஓர் உணர்வு ஒரு வாய்ப்பு வந்ததும் பொங்கி பூரித்துவிட்டது. சந்தர்ப்பவாதியான ஆண்களில் அவனும் ஒருவன். மாட்டிக்கொள்ளாத வரை தப்பில்லை என்று நினைப்பவன். மன்மதனைத் தொழுபவன்.

"என்ன பேச்சே காணும்?"

சுந்தர் கண்ணீர் உகுந்தான்.

"சே. சந்தோசமாயிருக்கிற நேரத்தில இது என்னது? எனக்கு ஒரு வாழ்க்கையே வாழ்ந்துட்ட மாதிரி இருக்குங்க. என் கனவுக்கெல்லாம் ஒரு அர்த்தம் கிடைச்சிட்ட மாதிரி இருக்கு. இது போதும். உங்களுக்கு சந்தோசமாயில்லையா?"

"இல்ல பாரதி. சந்தோமாத்தான் இருந்தேன். நான் பொய் சொல்லக் கூடாது. ரொம்ப சந்தோசமா இருந்தது. ஆனா பயமாகவும் இருக்கு. ஏற்கனவே சூரியாவுக்கு எம்மேல் கோவம். என்னை பக்கத்திலேயே வர விடமாட்டேங்கறா. குழந்தையைக் கூடப் பார்க்க விடலை"

"பையனாமே"

"உம்"

"மொதல்ல குழந்தையை பையனாக் கொடுத்ததுக்கு நான் ஏதாவது தரவேணாமா?"

"என்ன?"

அவள் அந்த நிலையிலேயே எழுந்து வந்து அவனை கட்டியணைத்து முத்த மிட்டாள்.

"நல்லா இருக்கா?"

"பயமா இருக்கு"

"எல்லாம் சரியாப் போய்டும். மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. சூரியாகிட்ட சண்டை பிடிக்காதீங்க. ஏழையா இருக்கறதும், பணக்காரங்களா இருக்கறதும் பெரிசில்ல. ஒரு நிறைவான வாழ்க்கை அடையறதுதான் கஷ்டம். சூர்யாவுக்கு குழந்தை மனசு. எனக்குத் தெரியும். அதனாலத்தான் உங்களை இப்படி அல்லாட விட்டுட்டா. பையன் பிறந்துட்டான் இல்ல. எல்லாம் சரியாப் போய்டும். போய்ட்டு வாங்க" என்றாள் அவள் வெற்றுக் கைகளை உயர்த்தி தலைமுடியைக் கோடாலி முடிச்சாய்ப் போட்டுக்கொண்டே.

அவனுக்கு அசிங்கமாகத் தோன்றவில்லை. அருவெறுப்பாகத் தோன்றவில்லை. அமுதக் கலசமாகத்தான் அவள் தோன்றினாள். ஒருபுறம் சூர்யாவை நினைத்தால் பயமாக இருந்தது. அரக்கி, அவளுக்கு எப்படியாவது இதுவும் தெரிந்துபோகும்.

"கிளம்பட்டுமா பாரதி?"

"சாப்பிட்டுப் போங்க. இன்னிக்கு விருந்து. எல்லாம் என் கையால பண்ணுது. என் திருப்தியும் விருந்துல சேர்ந்திருக்கும்"

இன்றைக்கு அவளுடைய வளைச் சிணுங்கலை நிறுத்தினான் மறுக்கவில்லை. சாப்பிட்டபடி அவள் இடுப்பை அணைத்தான். மறுக்கவில்லை. சற்று முன் அவளோடு இருந்த நிலை பரவசப்படுத்தியது. வாழ்நாள் முழுக்க அந்த

நினைவு அவனுக்கு மகிழ்ச்சியூட்டும் என்று தோன்றியது. வெற்றிலை மடித்துக் கொடுத்தாள்.

"எல்லாம் சரியாய்டும். உங்க நாகேசுவரன்தான் அதுக்கு வழி சொல்லப் போறான் பாருங்களேன்" என்று புறப்படும் சமயம் அவள் அனாவசியத்திற்கு சாமியை இழுத்தாள்.

இனி அவன் அந்தக் கோவிலுக்கு எப்படித் தைரியத்துடன் போவது எனக் கவலையுடன் எண்ணினான். ஏன் இப்படி மனித மனதை காமத்தின் சித்து விளையாட்டுக் களமாக அவன் படைத்திருக்கிறான்?

வாசலில் கார் இருந்தது.

ஏறிக்கொண்டான்.

"கவலைப்படாம போங்க" என்று பாரதி அவனுக்குக் கையசைத்து விடை கொடுத்தாள்.

"முடியாதுன்னுட்டீங்களா?" என்று மாமனார் கேட்டார். பதிலை எதிர்பாராமல் காரை கிளப்பினார்.

சாயங்காலம் செய்தி வந்தது.

நாகேசுவரன் கோயில் சிங்கமுகக் கிணற்றில் ஒரு பெண் சடலம் மிதப்பதாக. அவள் பெயர் பாரதி என்று சுந்தரிடம் தகவல் சொன்ன வேலைக்காரன் சொன்னான்.

சுந்தரின் உணர்வுகள் தென்னை மரத்திலிருந்து கீற்று மட்டை அற்று விழுகிற மாதிரி அற்று வீழ்ந்தான்.

## பருவகாலக் கனவுகள்! 12

"பாரதி இப்படிப் பண்ணுவாள்னு நான் எதிர்பார்க்கவே இல்லிங்க" என்றாள் சூரியா. குரலில் வருத்தமா, இல்லை இழந்த உரிமை மீண்டதில் உண்டான நிம்மதியா என்று



புலப்படவில்லை.

அவன் மனம் மவுனமாகக் கேவியது.

கோணல் கல்லாக இருந்த அவனது வாழ்க்கையைச் செதுக்கிச் சிற்பமாக்கியவள் அவள்தான். அவளால்தான் அவனால் சூரியாவை நெருங்க முடிந்திருக்கிறது. அதற்கு பிரதியாக அவனிடம் அப்படி என்ன பெரிதாக யாசித்துவிட்டாள்? அவனுடைய அன்பு. விள்ள விள்ளப் பெருகுவது அன்பு ஒன்றுதான். இதைக் கொடுத்தால் என்ன பங்கம் வந்து விடப் போகிறதென சூரியா இப்படி சண்டைக் கோழியாய் சிலிர்த்தாள் என்று அவனுக்கு தெரியவில்லை.

அவளுக்கு இப்போது குறைத் திருப்தியாய்த் தானிருக்கும். பாரதியின் தியாகத்தை அவனால் சூரியாவிடம் பறைச்சாற்றவும் முடியாது. பாரதி சொன்ன மாதிரி அவள் குழந்தைதான். இன்னொரு போர்க்களத்தைப் படைத்துவிட்டாள். சிலபேர் தியாகம் இப்படித்தான் நெய்த சேலையாய் மாறிவிடுகிறது. சேலை கட்டுகையில் தறியில் உட்கார்ந்தவன் கவனம் எப்போதாவது வருமா என்ன? சூரியாவின் வாழ்க்கையும், அவன் வாழ்க்கையும் அவள் நெய்து கொடுத்த நேர்த்தியான சேலை என்று யாருக்காவது தெரியுமா என்ன?

"எம்மேல கோபமா?" என்று கேட்டு அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள் சூர்யா.

"இல்ல"

"பின்ன ஏன் பதிலே இல்ல!"

"பதில் சொல்லணும்னு தோணலை. பாரதி போனதுக்கு நான்தான் காரணமோன்னு தோணுது"

"நீங்க என்ன பண்ணுவீங்க. அது அவள் தலையெழுத்து. அவளுக்கு விதி முடிஞ்சி போய்டிச்சி"

"ஆமா. அப்படித்தான் தோணுது! மண்ணும், விதையும் ஒண்ணாச்

சேரணுங்கறதுக்காக பாடுபடற எரு மாதிரி அவள். விதை மரமானதுக்கப்பறம் எருவுக்கு என்ன வேலை? விதி முடிஞ்சிரிச்சின்னுதான் சொல்லணும்"

"நாம நல்லா வாழணுங்க"

"வாழுவோம். எறும்பு சாகிறதைப் பார்த்தா யானை நடக்க முடியாதில்ல? நாம நடப்போம்"

"இல்ல, உங்களுக்கு எம்மேல கோவம். நம்ப பையனைக்கூடப் பார்க்க விடலேன்னு வருத்தம். வாங்க, நாம ரெண்டு பேரும் குழந்தையோட எங்காவது போய்ட்டு வருவோம். கொஞ்ச நாள் சுத்துனாத்தான் மனசு வேற எதையாவது நினைக்கும்"

"சரி"

"கிட்டத்தட்ட ஆறு மாசமிருக்குமில்ல?"

"என்னது?"

"உங்க கை எம்மேல பட்டு?"

"அதுக்கு நானா காரணம்?"

"இல்ல. நாந்தான் என்னவோ தப்பார்த்தம் பண்ணிக்கிட்டு, தப்பாட்டம் ஆடிட்டேன்"

"சரி"

"அப்படின்னா... என்னைப் பாருங்களேன்... இப்படி, என் கண்ணை..." அவள் அவனை நெருங்கினாள்.

.......................

சுந்தர் செதுக்கி வைத்த இயந்திர மரச்சிற்பமாக இருந்தான்.

குழந்தை அழுதது. கனவுகள் எல்லாம் தித்திப்பானவைதான்.

முற்றும்

விவேக் பப்ளிகேஷன்ஸ் சார்பில் வெளியிடுபவரும், ஆசிரியரும், எஸ்பி. ராமு, 6/84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. அச்சிட்டவர் எஸ்.பி. மெய்யப்பன், எஸ்.பி.எம். பைன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 005. ஆசிரியர் எஸ்பி. ராமு, தொலைபேசி : 28487533, 28483163.